விடுதலைப்புலிகள்

குரல் : 53 | தை - 1995 | அன்பளிப்பு : ரூபா 5/-

தமிழீழப் போராட்டம் பெற்றுவரும் அனைத்துலக அங்கீகாரம்!

மோதல் தவிர்ப்பு நடைமுறையைக் கண்காணிக்க வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகை

சிங்களப் படைக்கும் புலிப்படைக்கும் இடையில் அமுலிலுள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாட்டைக் கண்காணிக்கவென நோர்வே, நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் வருகைதந்துள்ளனர். தமிழ் மக்களுக்கு ஒரு சமாதானத் தீர்வு கிட்டவேண்டும் என்பதில், இந்த மூன்று நாடுகளும் மிகவும் அக்கறை காட்டிவந்துள்ளன. அதேவேளை, இருபகுதியினர்க்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களுக்குத் தாம் மத்தியஸ்தம் வகிக்கத் தயாராக இருப்பதாக, ஏற்கெனவே பல தடவைகள் இந்த நாடுகள் அறிவித்து, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியும் இருந்தன.

கடந்த காலங்களில் சிறீலங்கா அரசுடன் காணப்பட்ட போர்நிறுத்த உடன்பாடுகள் குழம்பியதற்கு, சிங்களப் படைகளின் அத்துமீறல்களே காரணமாக இருந்துவந்துள்ளன. ஆயினும், சிங்களப் படைகளின் மீறல்களை வெளியுலகத்திற்குத் தெரியவிடாது முன்னைய அரசுகள் மூடிமறைத்துவிட்டு, அதற்கான பழியைப் புலிகள்மீதே சுமத்திவந்தன.

ஆனால் இம்முறை, போர் ஓய்வு உடன்பாட்டை வெளியுலகப் பிரதிநிதிகள் கண்காணித்து வருவதால், சிங்களப் படைகளின் உடன்பாட்டு மீறல்கள் வெளியுலகிற்குத் தெரிய வரும்; அத்துடன், புலிகள் மீது அபாண்டமாகப் பழிசுமத்தலுக்கும் சந்தர்ப்பம் இருக்காது.

இதேவேளை, வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பங்குபற்றுகையால், எமது மக்களின் உரிமைப் போராட்டம் உலக அரங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டு, சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது இது எமது விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைத்த ஒருவகை அங்கீகாரமாகும்.

போர் ஓய்வைக் கண்காணிக்கும் அமைப்பில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பது, பேரினவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. பேரினவாதப் பத்திரிகைகள்மூலமாக அதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நடைமுறையால் தமிழரின் உரிமைப் போராட்டம் சர்வதேசமயப்பட்டுவிடும் என்ற காழ்ப்புணர்வுதான், அதற்குக் காரணம். அதேவேளை கனடா, நோர்வே, நெதர்லாந்து போன்ற நாடுகள் தமிழர்களுக்குச் சார்பாக நடந்துகொண்டுவிடும் என்ற அச்சமும், பேரினவாதிகளிடம் இருக்கின்றது. இதற்குக் காரணம், நீண்டகாலமாக இந்த நாடுகள் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் காட்டிவரும் தீவிரமான கரிசனையே ஆகும்.

இதேவேளை, போர் ஓய்வைக் கண்காணிக்கவென தமிழரின் தாயகப் பகுதி எங்கும் பயணம் செய்ய இருக்கும் இந்தப் பிரதிநிதிகள், சிங்களப் படைகள் நடாத்திய அநர்த்தங்களையும் கண்டும் - கேட்டும் அறிவார்கள். தமிழினத்திற்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இந்த இன அழிப்புப் போரின் கோரமுகத்தையும், ஒரு முழுமையான அரசியல் தீர்வு தமிழினத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய அவசரத் தேவையையும், அந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் புரிந்துகொண்டு, அதைச் சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிப்பார்கள். இதன்காரணமாக, தமிழரின் அரசியல் அபிலாசைகளின் நியாயத்தன்மை சர்வதேசமயப்படும் சாத்தியங்களும் உண்டு.

உள்ளே

- சமரசப் பாதையில் நம்பிக்கை ஒளி! - கருத்துரை
- தீர்வுத் திட்டம் எவ்வாறு இருக்கவேண்டும்? - நிலைப்பாடு
- சந்திரிகா அரசும் சிக்கலுக்குத் தீர்வும் - கட்டுரை
- "எவருக்கும் பணியாது தொடர்ந்து போராடு!" - வரலாறு
- லெப். கேணல் குணா
- மேஜர் கருணாகரன் - போராளியின் குருதிச் சுவடு
- 'த' தரும் வரலாறு



தலைவருடன் எமது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியற் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர்.

''நாம் விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள் தேசம்; சலுகைகளுக்காகக் கைநீட்டி நிற்கும் ஒரு சாதாரண கூட்டமல்ல. எமது தேசிய அபிலாசையை நிறைவுசெய்யும் உருப்படியான சுய ஆட்சித் திட்டங்கள் முன்வைக்கப்படுமானால், நாம் அதனைப் பரிசிலனை செய்யத் தயாராகவே இருக்கின்றோம்.''

- தலைவர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

தீர்வுத் திட்டம் எவ்வாறு இருக்கவேண்டும்?

7 ஆம் திகதி (7.1.95) நள்ளிரவுப் போர் ஓய்வுடன், இலங்கைத் தீவில் வாழும் மக்களிடம் ஒரு நிம்மதிப் பெருமூச்சு ஏற்பட்டுள்ளது; ஆயினும் இது எவ்வளவு காலத்திற்கு என்ற சந்தேகமும், அவர்களிடம் கேள்வியாக எழுகின்றது. கடந்தகால கசப்பான அனுபவங்கள்தான் இந்த அவநம்பிக்கைகளுக்குக் காரணம். எழுதப்பட்ட உடன்பாடுகள் கிழிக்கப்பட்டதும், உருவாகிவந்த சமாதான சூழல்கள் குழப்பப்பட்டதும், தீர்வேதுமில்லாமல் போர்நிறுத்தம் நீடிக்கப்பட்டு – பின்னர் மீண்டும் போர் மூண்டதும், கடந்தகால உண்மைகள்.

இப்போது, சந்திரிகா அம்மையாரும் புதிய தீர்வுத் திட்டமொன்றைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்போவதாக அறிவித்துள்ளார். கடந்தகாலத்தில் இருந்த சிங்களத் தலைவர்களைப் போலல்லாது, திருமதி சந்திரிகா குமாரணதுங்கா முற்போக்கான சிந்தனையுடைய ஒரு துணிச்சல்காரி என்பது, பலரது கணிப்பீடு. சந்திரிகாவின் இந்தச் சிறப்புக் குணாம்சம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் எங்ஙனம் உதவப் போகின்றது என்பதே, தமிழினத்தின் இன்றைய எதிர்பார்ப்பாகும்.

சிறீலங்கா ஜனாதிபதி சமர்ப்பிக்க இருக்கும அரசியற் தீர்வுத் திட்டம், தமிழரின் தேசிய அரசியல் அபிலாசைகளைத் தீர்த்துவைக்கும் வகையில் அமைய வேண்டும் என்பதே, எமதும் எமது மக்களினதும் விருப்பமாகும்.

இராணுவரீதியாக வெற்றிகொள்ளப் பட்டபின் ஒரு தேசிய இன மக்கள்மீது திணிக்கப்படும் 'அரசியல் தீர்வு' என்பது ஒருவகை. இந்தவகைத் தீர்வுத் திட்டத்தை சம்பந்தப்பட்ட மக்கள் இனம் கேள்வி - மறுமொழி இன்றி ஏற்றுக்கொள்வது தவிர்க்கமுடியாதது. ஆனால், இராணுவ பலத்தைப் பயன்படுத்தியும் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு மக்கள் இனத்துடன் காணும் அரசியல் உடன்பாடு என்பது வேறுவகை. இத்தகைய உடன்பாடொன்றினைபோது பல்வேறு விடயங்கள் கருத்தில் எடுக்கப்படவேண்டும். அரச இயந்திரத்தின் ஆயுத பலத்தையும் பொருளாதார யுத்தத்தையும் எதிர்கொண்டபடி, உயிர்வாழ்தலைச் சாத்தியமாக்குவதற்கும் தற்காப்புப்போரில் வெற்றிபெறும் பொருட்டும் அந்த மக்கள் செலுத்திய உயிர்விலை - அர்ப்பணிப்பு - துயர வாழ்க்கை - என்பன, தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது கட்டாயம் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை.

தமிழினத்தின் தேசியப் பிரச்சினையும் இந்தவகை நோக்குநிலையிலிருந்தே பார்க்கப்பட வேணடியது என்பதில் எந்த ஐயமும் இருக்க முடியாது.

சமாதானப் பேச்சை நடாத்திப்பார்ப்பது, இல்லையேல் இராணுவத்தை ஏவிவிடுவது என்ற மாதிரியான அறிக்கைகள், உண்மையில் நல்ல நோக்கம் கொண்டவையல்ல. அது அடிப்படையில தேசிய இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே நம்பியிருப்பவர்களது கருத்தாகவே இருக்கும்.

கடந்த காலங்களைப் போல், சிங்களப் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்தும் அடிப்படையில் தீர்வுத் திட்டங்களை உருவாக்க முயலக்கூடாது. உண்மையில், இதுதான் நாற்பதாண்டு காலமாக நடந்து வருகின்றது: அதுதான் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டாத உயரத்திற்குக் கொண்டுசென்றுள்ளது.

ஆகவே, தமிழரின் தேசிய அபிலாசைகளை சிங்களப் பேரினவாதத்தின் ஆதிக்க அபிலாசையுடன் இணைத்துப் பார்க்க முயலக்கூடாது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக - இன அழிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக - ஈழத் தமிழினம் இரத்தமயமான ஓர் அரசியலை எதிர்கொண்டு வாழ்கின்றது. தற்காப்பை அடிப்படையாகக்கொண்ட இந்த எதிர்நீச்சலை வெற்றிகரமாகச் சமாளித்ததுடன், தமிழர் நிலத்தின் கணிசமான பகுதியை மீட்டெடுத்து - அங்கே ஒரு நிர்வாக ஆட்சிக் கட்டமைப்பையும் உருவாக்கி - புலிகள் இயக்கம் செயற்பட்டுவரும் யதார்த்தத்தை, சிறீலங்காவின் புதிய ஜனாதிபதி மறக்கவோ,மறுக்கவோ கூடாது.

இந்த அரசியல் யதார்த்தத்தைக் கருத்திற்கொண்டபடி, தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வுத் திட்டம் உருவாக்கப்படவேண்டும். தமிழினத்தின் பாதுகாப்பு - கௌரவம் - சுதந்திரம் என்பன, சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு என்ற அஸ்திரத்தால் விழுங்கப்படுவதை அனுமதிக்காத அளவுக்கு, சிறீலங்காவின் அரசியலமைப்புச் சட்டம் இருக்கவேண்டும். அத்துடன், வேர்விட்டு- விழுதெறிந்துவிட்ட தமிழீழ தேசியத்தைக் கொலை செய்யும் முயற்சியாகவும் தீர்வுத் திட்டம் அமையக்கூடாது.

"போராட்டத்தின இன்றைய வளர்ச்சிக் கட்டத்தைக் கருத்திற்கொண்டு, உருப்படியான சுயாட்சித் திட்டங்கள் முன்வைக்கப்படுமானால், நாம் அதைப் பரிசீலிப்போம்" என்று, புலிகளின் நிலைப்பாட்டைத் தலைவர் பிரபாகரன் ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டார். ○

இந்திய தேசிய அரசியலில் ஒருபுதியபோக்கு

இலங்கைத் தேசியம் என்ற கருத்துருவைப்போலவே இப்போது, இந்தியத் தேசியம் என்ற அரசியற் சித்தாந்தமும் இந்திய உபகண்டத்தில் அடிபட்டுப் போய்க்கொண்டிருக்கின்றது என்பது பல அரசியல் அறிஞர்களது கருத்தாகும். இந்திய மாநிலங்கள் நான்கில் அண்மையில் நடந்த தேர்தலின் முடிவுகளும் அதையேதான் வலியுறுத்துவது போலுள்ளது. இந்தியத் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லப்படும் கொங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதா கட்சியும் இம் மாநிலத் தேர்தல்களில் படுதோல்வியடைந்துள்ளன. இதற்கு மாறாக, அந்தந்த மாநிலமக்களின் தேசியவாதத்தைப் பிரதிபலிக்கும் மாநிலக் கட்சிகளே தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஆட்சியைப் பிடித்துள்ளன.

நான்கு மாநிலங்களின் சட்டசபைக்காக நடந்த இந்தத் தேர்தலில் ஆளும் கொங்கிரஸ் கட்சி சந்தித்த படுதோல்விக்கு, கட்சியில் உள்ள உட்பிளவுகளும் நரசிம்மராவின் பலவீனமான தலைமைத்துவமுமே காரணங்கள் என, சில அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். அதே வேளை, நரசிம்மராவ் அரசு அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக்கொள்கை, இந்திய முதலாளிகளினதும் உயர்மத்திய தரவர்க்கத்தினரதும் பணப்பைகளை நிரப்பியிருக்கின்றபோது, இந்திய 'வோட்டுவங்கி' யின் முதலீட்டாளர்களான சாதாரண மக்களுக்கு எந்தவித நன்மைகளையும் கொடுக்கவில்லை. இதுவும் கொங்கிரசின் படுதோல்விக்கு ஒரு காரணம் என்று, அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த மதிப்பீடுகள் உண்மையானவை என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆயினும், இவற்றிற்கு அப்பால் இந்திய அரசியல் அரங்கில் ஒரு புதிய அரசியல் பரிமாணம் கருக்கொண்டிருப்பதையும் மறுக்க முடியாது. அதாவது, தேசிய அரசியலுக்கு அப்பால் மாநிலங்கள் தததமது தனித்துவங்களைப் பேணமுற்படும் தன்மையே அப்புதிய அரசியல் பரிமாணமாகும். கர்நாடகாவிலும், ஆந்திராவிலும், சிக்கிமிலும் அதுதான் நடந்துள்ளது. அந்த அந்த மாநில மக்களது உணர்வுகளை – அபிலாசைகளை – பிரதிபலித்த சொந்தக் கட்சிகளையே அவ்வவ் மாநில மக்களும் ஆதரித்துள்ளனர்.

இந்தியாவில் மாநிலவாரியான தேசியவாதம் படிப்படியாக மேலோங்கிவருவதை, தமிழ்நாட்டின் முதுபெரும் பத்திரிகையாளர் பி. சி. கணேசன் அவர்கள் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் (10. 12. 94 – தமிழோசை) சுட்டிக்காட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேற்கு வங்கத்தில் நீண்ட காலமாக ஜோதிபாசுவின் தலைமையிலான கொம்யூனிசக் கட்சி பதவியில் இருந்துவருவதுபற்றி திரு. பி சி. கணேசன் கூறுகையில், "வங்காள மக்களது தேசிய உணர்வை கொம்யூனிசக் கட்சி பிரதிபலித்துவருவதே, அந்தக் கட்சியை வங்காளிகள் தொடர்ந்தும் பதவியில் அமர்த்தப் பிரதான காரணமாக இருந்து வருகின்றது" என்றார்.

இந்திய தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து மாநிலங்கள் விலகி ஓடமுனையும் அதேவேளை, மாநிலங்கள்தோறும் எழுந்துவரும் தேசியவாதங்களின் விளைவாக, மாநிலங்களிடையே பிணக்குகளும் பிரச்சினைகளும் இப்போது அதிகரித்து வருகின்றன.

மாநிலங்கள் ரீதியாக ஒவ்வொரு தேசிய இனத்தினதும் தேசிய விழிப்புணர்ச்சி எல்லா மாநிலங்களிலும் பரவி – வளர்ந்து வருமானால், இந்திய மத்திய ஆட்சியில் ஒரு ஸ்திரமற்ற தன்மை ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. இது மாநிலவாரியான தேசியவாதத்தை மேலும் உச்சநிலைக்குக் கொண்டுசெல்ல உதவிவிடும்.

இந்தியத் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் அரசியல்வாதிகள் புரியும் ஊழல் – அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சுயநலச்செயற்பாடுகள் என்பன மாநில மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், தமது சொந்தத் தேசிய இனத்திலிருந்தே தங்களுக்கென தலைவர்களைத் தேடிக்கொள்ளவேண்டும் என்ற இனரீதியான உந்துதலையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

பனிப்போர் முடிவடைந்ததும் புதியதொரு வடிவத்துடன் பல்தேசிய இன நாடுகளுக்குள் எழத்தொடங்கிய தேசியவாதங்கள், தனியரசுகளை அமைத்துக் கொண்ட பின்னர்தான் அடங்கியிருக்கின்றன என்பதற்கு சோவியத்யூனியன், யூகோஸ்லாவியா...... போன்ற நாடுகள் உதாரணமாக விளங்குகின்றன. எதிர்காலத்தில் இந்தியாவிலும் அது நடைபெறுமா என்ற ஐயங்களையும் இது தோற்றுவித்துள்ளது. வளர்ந்துவரும் மாநிலவாரியான தேசியவாதங்கள் அதற்குக் கட்டியம் கூறுவதுபோலுள்ளன! ○

www.eelamview.com

சமரசப் பாதையில் நம்பிக்கையின் ஒளி!

சந்திரிகா அரசு பதவியேற்ற நாளில் இருந்து, இந்த இனப் போரை நிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று, புலிகள் இயக்கம், கோரிக்கைவிடுத்து வந்ததுடன், அதற்குச் சார்பாக சில நல்லெண்ணச் சமிக்ஞைகளையும் விடுத்துவந்தது. இந்த சமாதானப் பேச்சுக்கள் போர்நிறுத்த சூழலில் நடைபெற வேண்டுமென தொடர்ச்சியாக புலிகள் வலியுறுத்தி வந்தனர். போரை உடனடியாக நிறுத்தவேண்டும் - இனப் பிரச்சினையை சமாதானம் மூலம் தீர்க்கவேண்டும் - என்ற மக்கள் ஆணையுடன் அதிகாரபீடத்துக்கு வந்தாலும்கூட, யுத்தத்தை நிறுத்துவதில் ஆரம்பத்தில் புதிய அரசு தயக்கம் காட்டியது. ஆயினும் இறுதியில் புலிகளின் வேண்டுகோளை சந்திரிகா அரசும் ஏற்றுக்கொண்டுவிட்டது. இதன் பிரகாரம் போர்நிறுத்தத்திற்கு முன்

தலைவர் பிரபாகரன்: *உறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வை நோக்கி.*

னோடியான பகைமைத் தணிப்பு அமுலுக்கு வந்துள்ளது. இந்த உடன்பாட்டின்மூலம் ஆயுத மோதல்கள் நிறுத்தப்படுவதுடன், பகைமைத் தணிப்பை எங்ஙனம் அமுல் படுத்துவதென தலைவர் பிரபாகரன் அவர்களும் சிறீலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா அவர்களும் சில விதிமுறைகளைத் தயாரித்து வெளியிட்டுள்ளனர். இந்த விதிமுறைகள் சரியாக அமுல்படுத்தப்படுகின்றதா? இல்லையாயின் அதற்கு யார் காரணம் என அறிவதற்காக, கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அரசபடையினதும் புலிகள் இயக்கத்தினதும் பிரதிநிதிகளுடன், வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இந்தக் கண்காணிப்புக் குழுக்களில் இடம்பெற்றுள்ளனர்.

புலிகளுக்கும் சந்திரிகா அரசிற்கும் இடையேயான வரலாற்றுப் புகழ்மிக்க இந்த பகைமை தணிப்பு நடைமுறை வெற்றிகரமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைத் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வெளி உலகமும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். நடைபெற இருக்கும் மூன்றாங்கட்டப் பேச்சின் போதும் அதன் பின்னர் தொடராக இடம்பெறப்போகும் பேச்சுவார்த்தை அமர்வுகளின்போதும் சமாதான முயற்சிகள் படிப்படியாக முன்னெடுத்துச் செல்லப்பட இருக்கின்றன.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண முயலும் இந்தச் சமாதானப் பேச்சுகள் வெற்றிகரமாக அமைவதற்காக, புலிகள் இயக்கம் ஏற்கெனவே சில யோசனைகளை அரசுக்கு தெரிவித்திருந்தது. அதன்படி அவசரப் பிரச்சினைகள், அடிப்படைப் பிரச்சினைகள் என, மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இரண்டாக வகுத்து, முதலில் அவசரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது பேச்சுவார்த்தையின் வெற்றிக்கு வழிவகுக்குமென, புலிகள் இயக்கம் கூறியிருந்தது. அவ்விதம் செய்யப்படும்போது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை பிறக்கும், இதனால் ஒரு இயல்பு நிலை தோன்றும் என்றும், அத்தகைய ஒரு நிலையில் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளை விவாதித்து, ஒரு உறுதியான அரசியல் தீர்வொன்றைக் காணமுடியும் என்றும் புலிகள் இயக்கம் ஆலோசனை தெரிவித்திருந்தது.

ஆரம்பத்தில் புலிகள் இயகக்த்தின ஆலோசனைகளை ஏற்ற சந்திரிகா அரசு முதலாம கட்டப் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து, அவற்றை அமுலபடுத்துவதாக உறுதி கூறியிருந்தது.

ஆனால் கொடுத்த வாக்கில் இருந்து அது பின்னர் பின்வாங்க முயற்சித்தது.

முதலாம்கட்டப் பேச்சில் காணப்பட்ட முடிவினுக்குசிங்கள இராணுவம் கொடுத்த நெருக்குதல் காரணமாகவே, சந்திரிகா அரசு அவ்விதம் பின்வாங்கமுயற்சித்தது.

புலிகள் வகுத்துக்காட்டிய அவசரப் பிரச்சினைகள் மக்கள் மீது சுமத்தப்பட்ட போரின் நேரடி விளைவுகளாகவே உள்ளன.

அதே வேளை, அது சிங்கள இராணுவ இயந்திரத்துடனும் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப்போனால் சிங்களப் படைத்துறையின் போர்முறைத்திட்டத்துடன் அது சம்பந்தப்பட்டது. தமிழ் மக்களின் மனவுறுதியைச் சிதைத்து விடுதலைப் போராட்டத்தை நசுக்க படைத்துறை தலைமை வரைந்த திட்டங்கள்தான், பொருளாதாரத் தடையும் கடலடங்கு சட்டமும் குடாநாட்டு முற்றுகையும் ஆகும். இந்த நிலையில் மேற்குறித்தவற்றை நீக்கிவிடுவது என்பது, இராணுவத்தின் போர்முறைத் திட்டத்தைக் கைவிடுவதற்கு ஒப்பானதாகும். இதனாலேயே அவசரப் பிரச்சினைகள் என்று புலிகள் அடையாளம்காட்டியவற்றைத் தீர்க்க இராணுவம் எதிர்ப்பு தெரிவித்தது. ஆனால் தமிழரின் குரல்வளையை நெரிக்கும் போர்முறைத்திட்டத்தைக் கைவிடாது சமாதானம் பற்றிப் பேசுவது அர்த்தமற்ற ஒன்று என்பது, புலிகளின் நிலைப்பாடாகும். இந்த நிலையில் சந்திரிகா அரசும் இராணுவத்தின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு, அவசரப்பிரச்சினைகளைக் கைவிட்டுவிட்டு, முதலில் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வரமுயன்றது. தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகள் பெரும்பாலும் சிங்கள அரசியல்வாதிகளோடு சம்பந்தப்பட்டுள்ளன. எனவே, காலாதிகாலம் நடந்து வந்ததுபோல அர்த்தமற்ற முறையில் பேச்சுக்களை நடாத்த புதிய அரசு விரும்பியது. ஆனால், ஏற்கெனவே உடன்பாடுகண்டதுபோல அவசரப் பிரச்சினைகள்தான் முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி தலைவர் பிரபாகரன் வரைந்த கடிதம், சந்திரிகா அரசை வேறுவழியின்றி சம்மதிக்கச் செய்தது.

இப்போது போர் ஓய்வு நடைமுறையில் உள்ளது. ஆயினும் இது ஓர் முழுமையான போர்நிறுத்தமாக பரிமாணம் கண்டு, ஏற்கெனவே இரு பகுதியினரும் அடையாளம் கண்டது போல அவசரப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாகத் தீர்க்கப்பட்டு, பேச்சுவார்த்தை ஒரு அரசியல்தீர்வை நோக்கிச் செல்லவேண்டும் என்பதே அனைவரினதும் அவாவாகும். அவசரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு இப்போது தாம் தயாராக இருப்பதாக, பாதுகாப்புத்துறைச் செயலாளர் ஜெனரல் கமிலடென் வணசிங்க, ஜனாதிபதி சந்திரிகாவின் முன்னிலையில் பத்திரிகையாளர்களிடம் உறுதி கூறியுள்ளார்; இது நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. இந்த உறுதிமொழி சரிவரப் பாதுகாக்கப்படுவதில்தான் சமாதானப் பேச்சுக்களின் தலைவிதியே தங்கியுள்ளது.

முன்னரும் இராணுவமே பேச்சுவார்த்தை முயற்சிகள் குழம்பக் காரணமாக இருநதுவந்துள்ளது: போர்நிறுத்த உடன்பாடுகளை மீறி -மககளைப்படுகொலைசெய்து, சமாதானச் சூழல்களை நாசமாக்கியது. ஆனால், இம்முறை போர் ஓய்வை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கண்காணிப்புக் குழுக்கள் மேற்பார்வை செய்ய இருப்பதால், இராணுவம் கட்டுமீறி நடந்துகொள்ள முடியாது என்று நம்பப்படுகின்றது.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தளவில், உருவாகியுள்ள இப்புதிய சமாதானச் சூழலைப் பயன்படுத்தி உறுதியான - அதேவேளை நிரந்தரமான - ஒரு அரசியல் தீர்வை எமது மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் அது தீவிரமாக உழைக்க இருக்கின்றது.

மூன்றாங் கட்டப் பேச்சைத் தொடர்ந்து ஒரு தீர்வுத் திட்டமொன்றை புலிகளிடம் சமர்ப்பிக்க இருப்பதாக, சந்திரிகா அம்மையார் கூறியுள்ளார். அவ்விதம் ஒரு தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுமானால், அதைப் பரிசீலனைசெய்ய புலிகள் இயக்கம் தயாராகவே இருக்கின்றது.

நிலைமை இவ்விதம் இருக்க, புலிகளுக்கும் அரசிற்குமிடையேயான இந்த சமாதான இணக்கப்பாட்டை சிங்களப் பேரினவாதம் சகித்துக் கொள்ளுமா என்பது இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது. ஆயினும், பேரினவாதத்தின் ஊதுகுழல்களான கொழும்புப் பத்திரிகைகள் சந்திரிகா அரசைத் தேவையில்லாது எச்சரிப்பதிலும், புலிகள்மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செய்திகளைத் திரித்தும் - மிகைப்படுத்தியும் சிங்கள மக்களைப் பயமுறுத்த முனைகின்றன. இது அடங்கிக்கிடக்கும் பேரினவாதிகளுக்கு உற்சாகம் ஊட்டும் மருந்தாக அமையலாம். ஆயினும் போரின்

ஜனாதிபதி சந்திரிகா: *சமாதான உருவாக்கலில் அடுத்தது என்ன?*

துயரை நன்கு அனுபவித்துவிட்ட சிங்கள மக்கள், பேரினவாதிகளின் கூச்சல்களுக்குச் செவிசாய்க்கமாட்டார்கள் என்றே கருதப்படுகின்றது. ○



நாங்கள்
சுதந்திரப் பூங்காவில்
ஓடி விளையாட
அனுமதி வேண்டும்
அனுமதியில்லையா...—
அப்போ,
நெருப்போடு விளையாட
விரும்புகின்றோம்.
இப்போ.
நஞ்சோடு நெருப்பே – எமக்கு
உணவு
விடுதலை வானத்து
நிலவு இதுவென்று
சுட்டிக்காட்ட – எங்கள்
சுட்டு விரலுக்கு அனுமதி
வேண்டும்
அனுமதியில்லையா...—
அப்போ,
சீண்டிப் பார்ப்பதை
நிறுத்து!
சுட்டு விரலை
" சுடு விரல்" என்று
பெயர் மாற்றிக்கொள்ள
விட்டு விடு.

அ. அமுதன் (சுரேஸ்)

www.eelamview.com

இனத்திற்கு வந்த ஆபத்தை தனது தலையில் சுமந்த தலைவர்

10. 10. 1987 – இந்தியப் படைகள் புலிகள்மீது திடீரெனப் போர்தொடுத்த நாள். இத்திடீர்ப் போர்ப்பிரகடனத்திற்கு உடனடிக் காரணங்கள் என்று எதுவும் இருக்கவில்லை. எல்லாம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவைதான்.

தலைவர் பிரபாகரனைக் கொன்றுவிட்டு புலிகள் இயக்கத்திற்குச் சமாதி கட்டவேண்டும் என்பதுதான், இந்திய ஆளும்வர்க்கத்தின் ஏகோபித்த விருப்பம்; இதற்கு ஆழமான காரணங்கள் பலவற்றை அது வைத்திருந்தது.

'திராவிட எழுச்சி' என்ற சொற்பிரயோகத்தால் அழைக்கப்பட்டுவந்த தமிழ்த் தேசிய எழுச்சி என்ற விடயம், காலாதிகாலமாக இந்திய ஆளும் வர்க்கத்தை அச்சுறுத்திக்கொண்டே வந்தது.

இந்த நிலையில்...தமிழ்நாட்டில் செத்துக்கொண்டிருந்த தமிழ்த் தேசியத்தைப் பார்த்து அகமகிழ்ந்தபடியிருந்த இந்திய ஆளும்வர்க்கம், அது தமிழீழத்தில் தலைவர் பிரபாகரனின் தலைமையில் புது வடிவம் எடுத்து வீறுடன் வளர்ந்துவந்ததைச் சரியாகவே இனங்கண்டு, அஞ்சத் தொடங்கியது.

எனவே, தலைவர் பிரபாகரனைத் தனது முக்கிய எதிரியாக இந்திய ஆளும் வர்க்கம் கருதத் தொடங்கியது.

தமிழீழத்தில் சகோதரச் சண்டை ஒன்றை உருவாக்கி, ஆழவேரூன்ற முயன்ற தமிழீழ தேசியத்தைக் குழந்தைப் பருவத்திலேயே கொலைசெய்ய, இந்திய ஆளும்வர்க்கம் சூழ்ச்சி செய்தது.

ஆனால் அந்தச் சதியைப் புலிகள் முளையிலேயே கிள்ளியெறிந்துவிட்டனர். அதன் பின் தமிழீழ தேசியத்தைத் தானே நேரடியாக அழிக்க, இந்திய ஆளும்வர்க்கம் முடிவெடுத்தது.

முதலில் அரசியல் வழிமுறைகள்மூலம் முயன்றுபார்க்க விரும்பியது. இந்திய – இலங்கை ஒப்பந்தம் என்ற அரசியல் சதுரங்க விளையாட்டின்மூலம், நயவஞ்சகமாகத் தமிழீழத் தேசியத்திற்குக் குழி பறிக்க முயன்றது.

ஆனால், அந்த அரசியல் சதுரங்க அரங்கை புலிகள் இயக்கம் திறமையாகக் கையாண்டதுடன், இந்திய ஆளும்வர்க்கத்தின் உண்மைச் சொரூபத்தையும் தமிழீழ மக்களுக்குத் தோலுரித்துக் காட்டத் தொடங்கியது.

மெதுமெதுவாக தமிழீழ மக்களும் இந்தியாவின் கபடத்தனத்தை உணரத் தொடங்கினர்.

இதை வளரவிட இந்திய ஆளும்வர்க்கம் விரும்பவில்லை.

எனவே, ஏற்கெனவே முடிவுசெய்து வைத்திருந்த அடுத்த கட்டமாகிய போருக்குச் செல்ல, அது முடிவெடுத்தது.

புலிகள்மீது நேரடியாகப் போர்ப் பிரகடனம் செய்யுமுன், வெளி உலகிற்கும் தமிழீழத்திற்கும் இடையிலிருந்த செய்தித் தொடர்பைத் துண்டிக்க விரும்பி ஈழமுரசு, முரசொலி பத்திரிகை நிறுவனங்களையும், நிதர்சனம் ஒளிபரப்புக் கோபுரத்தையும் குண்டு வைத்துத் தகர்த்து, போர் முரசு கொட்டியது.

இந்தியப் படைகளின் பிரதான இராணுவ இலக்காக தலைவர் பிரபாகரனே இருந்தார்.

படைபலத்தைப் பயன்படுத்தி தலைவர் பிரபாகரனை அழித்து, புலிகள் இயக்கத்தின் பற்களையும் – நகங்களையும் பிடுங்கி எறிந்துவிட்டுத் தமிழீழ தேசியத்தைத் தூக்கிலிடுவது என்று, இந்தியா முடிவு செய்தது.

ஆனால், இந்திய இராஜதந்திரிகள் கணித்த கால எல்லைக்கும் அப்பால் போர் நீண்டு சென்றது; அழிவுகளும் இழப்புகளும் பெருமளவில் அதிகரித்தன.

இந்தியப் படை பலத்திற்கு அஞ்சி, தனது உயிரைப் பாதுகாப்பதற்காக தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடுவார்என்று எதிர்பார்த்த இந்திய ஆளும்வர்க்கத்திற்கு, அது நடைபெறாமல் போனது ஆச்சரியத்தையும், அதேவேளை ஆத்திரத்தையும் கொடுத்தது.



எனவே படைபலத்துடன் சேர்த்து ஒரு அரசியல் பேரத்திலும் இந்தியா இறங்கியது.

போரை நிறுத்தி ஆயுதங்களை ஒப்படைக்கத் தலைவர் முன்வருவாரானால், பெருந்தொகைப் பணமும் மற்றும் சலுகைகளும் அவருக்கு வழங்கப்படும் என, இந்திய அரசு உறுதி கூறியது.

நிபந்தனைகளை ஏற்றால் புலிகள் இயக்கத்திற்குத் தருவதாக வாக்களிக்கப்பட்ட தொகை கொஞ்சநஞ்சமல்ல. மக்களின் புனர்வாழ்வுக்கென்று 500 கோடி ரூபாவும், இயக்கத்திற்கென்று 200 கோடி ரூபாவும் வழங்கத் தயாராக இருப்பதாக, இந்தியாவில் இருந்த புலிகளின் பிரதிநிதிகளிடம் இந்திய அரசு உறுதியளித்துக் கூறியது.

இந்திய அரசின் சார்பில், அதன் உளவுத்துறையான 'றோ'வின் பிரதம அதிகாரி கேணல் வர்மா அவர்கள் பேரத்தில் ஈடுபட்டார்.

இந்தப் பெருந்தொகைப் பணத்தை வைத்துக்கொண்டு தொழிற்சாலை போடலாம்; மற்றும் மூதலீடுகளைச் செய்து வருமானம் சம்பாதிக்கலாம்; அத்துடன் இந்தப் பணத்தை வீசியெறிந்து தேர்தலையும் வென்று பதவியிலும் அமரலாம்; அதைப் பயன்படுத்தி மேலும் மேலும் சுகங்களையும் – சலுகைகளையும் அதிகரிக்கலாம் என்றும் இந்தியப் பிரதிநிதியான கேணல் வர்மா தலைவருக்கு ஆசை காட்டினார். அதுமட்டுமல்ல, ஆயுதங்களை ஒப்படைத்தாலும் தலைவரின் மெய்ப்பாதுகாப்பிற்கென்றும் மற்றும் தளபதிகளினது பாதுகாப்பிற்கென்றும் தேவையான ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்றும், சலுகைகளை அள்ளி வீசினார்.

சலுகைகளையும் பணத்தையும் அள்ளி வீசுவதாகக் கூறிவிட்டு இந்தியா சும்மா இருக்கவில்லை. அந்தச் சலுகை வலைக்குள் தலைவரை விரைவாக வீழ்த்துவதற்காக, அவருக்கெதிரான இராணுவ அழுத்தத்தையும் இந்திய அரசு அதிகரித்தது.

மணலாற்றுப் பகுதியை முற்றுகையிட்டு, இராணுவ நடவடிக்கையை இந்தியப்படைகள் தீவிரப்படுத்தின. தலைவரின் இருப்பிடம் என்று கருதிய பகுதிகளெங்கும் இந்திய வான்படை 200 கி.கி. குண்டுகளை வீசத் தொடங்கியது. அடர்ந்த காடுகள், திறந்த வயல்வெளிகளைப்போல

ஒடுக்கப்படும் இனத்தின் தலைவர்களுக்கு வசதிகளையும் சலுகைகளையும் வாரி வழங்கி அவர்களை வளர்ப்பு நாய் நிலைக்கு ஆளாக்கிவிட்டு, அந்த இனத்தின் எழுச்சியை நசுக்குவது அல்லது இதற்கு உடன்பட மறுத்தால் அந்தத் தலைவர்களுக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களை அடிபணியச்செய்து, அவர்கள்மூலமாக அந்த இனத்தின் அடிமைச் சாசனத்தை எழுதுவிப்பது...... அல்லது அழிப்பு வேலைகளைச் செய்து அந்த இனத்தைப் பலவீனப்படுத்திவிட்டு, அதன் மேல் அரைகுறைத் தீர்வுகளைத் திணிப்பது...... இவைதான் காலாதி காலமாக ஏகாதிபத்தியவாதிகளும் – ஆக்கிரமிப்பு சக்திகளும் வெற்றிகரமாகச் செயற்படுத்திவந்த – வருகின்ற – சித்தாந்தங்கள் ஆகும்.

ஆனால் இந்த ஏகாதிபத்திய சித்தாந்தங்கள் எதுவுமே, தலைவரிடம் எடுபடவில்லை.

www.eelamview.com

மாறும் அளவுக்கு – பாரிய விருட்சங்களைத் தகர்த்தெறிந்து அங்கிருந்தோரை அஞ்சச் செய்யுமளவுக்கு – அப் பாரிய குண்டுகள் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. இப் பாரிய குண்டுகளைத் தலைவரின் இருப்பிடப்பகுதிகள்மீது வீசிக்கொண்டு, இந்தியாவில் இருந்த புலிகளின் பிரதிநிதிகளிடம் 200 கி. கி. குண்டுகளின் தன்மைகளை விளக்கியபடி, ''விரைவில் தலைவர் சாகப்போகின்றார் – அதற்கிடையில் கோரிக்கைகளை ஏற்கச்சொல்லித் தகவல்அனுப்புங்கள்'' என்று, இந்திய அதிகாரிகள் எச்சரிக்கைகளை விடுத்தனர்.

என்ன செய்தாவது தலைவரைப் பாதுகாத்துவிடவேண்டும் என்பதில் அக்கறைகொண்ட எமது மூத்த உறுப்பினர்களான அந்தப் பிரதிநிதிகள், கோரிக்கைகளை ஏற்கும்படி தொலைத்தொடர்புச்சாதன மூலம் தலைவரிடம் மன்றாடினர். அக்கோரிக்கைகளை ஏற்பதால் இயக்கத்திற்கு நஷ்டமேற்பட்டுவிடப் போவதில்லை என்று எடுத்து விளக்கினர். இயக்கத்திற்கென்று இந்திய அரசு தருவதாக ஒப்புக்கொண்ட 200 கோடி ரூபா என்பது, அந்த நேரம் எமது இயக்கத்திடம் இருந்த ஆயுதங்களின் மொத்தப் பெறுமதியைவிடப் பல மடங்கு அதிகமானது என்ற உண்மையைச் சுட்டிக்காட்டி, ''ஆயுதங்களை ஒப்படைத்தால் நஷ்டமேற்படப் போவதில்லை; தேவை ஏற்பட்டால் அப் பணத்தைப் பயன்படுத்தியே ஆயுதங்களைக் கொள்வனவு செய்யலாம்'' என்று வாதிட்டனர்.

இதேவேளை, தலைவரோடு தோளோடு தோள் நின்றபடி களமாடிக்கொண்டிருந்த தளபதிகளும் சண்டைக் களத்தின் கடுமையை நன்றாகவே உணர்ந்திருந்தனர்.

இந்திய வான்படை குண்டுகளை அள்ளிக்கொட்ட, இந்திய இராணுவம் முற்றுகையை இறுக்கி – புலிகளின் அசைவியக்கத்தைத் தடுத்து புலிவீரர்களை மூச்சுத் திணறவைத்துக்கொண்டிருந்தது. இதனால், மணலாற்றுக் காட்டுக்குள் பட்டினியும் – நோயும் – சாவும் போட்டிபோட்டுக்கொண்டு, தலைவர் உட்படப் புலிவீரர்களை வதைத்தன.

இந்த நிலையில் தலைவரைப் பாதுகாக்க முயன்ற தளபதிகள் மணலாற்றுக் காட்டைவிட்டு வேறிடம் செல்லும்படி தலைவரிடம் வேண்டினர்.

வேறிடம் செல்வதால் மட்டும் உயிர்ப் பாதுகாப்பு ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய தலைவர் அவர்கள், தளபதிகளின் வேண்டுகோள்களை ஏற்க மறுத்தார்.

அந்தக் காடு அடங்கிலும் பரந்துகிடந்த பழையகால நினைவுச் சின்னங்களைச் சுட்டிக்காட்டிவிட்டுத் தலைவர் சொன்னார்,

''இது பண்டாரவன்னியன் உலாவித் திரிந்த காடு. இந்தக்காட்டில் இருந்தபடியே நான் போராடி வெல்வேன் அல்லது வீரச்சாவடைவேன் '' என்று வைராக்கியமாகக் கூறிவிட்டு, சண்டையை வழிநடாத்துவதிலேயே முழுக்கவனம் செலுத்தினார்.

இவ்விதம் இந்தியாவில் இருந்த எமது மூத்த உறுப்பினர்களும், களத்தில் நின்று போராடிக்கொண்டிருந்த தளபதிகளும் தலைவரைப் பாதுகாக்கப் பிரயத்தனப்பட்டனர்.

ஆனால், தலைவரது எண்ணமெல்லாம் தனது சொந்தப் பாதுகாப்பின் மீதோ அல்லது தருவதாக வாக்களிக்கப்பட்ட சலுகைகள் மற்றும் பணத்தின் மீதோ இருக்கவில்லை; அவரது முழுக்கவனமும் எமது இனத்தின் அரசியல் உரிமைகள் மீதே இருந்தது.

''எவருக்கும் அடிபணியாது, விடுதலை கிடைக்கும் வரை தொடர்ந்து போராடு''

புனர்வாழ்வுக்கான பணத்துடன் மட்டும் நின்றுவிடாது, அரசியல் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் எழுத்துமூல உறுதி தர வேண்டும் என்று இந்திய அரசைக் கோரும்படி, பேச்சுவார்த்தைப் பிரதிநிதிகளிடம் தலைவர் பணித்தார்.

இந்திய அரசின் சார்பில் அரசியல் பேரத்தை நடாத்திக்கொண்டிருந்த கேணல் வர்மா இதற்கு உடன்பட மறுத்தார்.

''ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு பணத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்; தமிழ் மக்களுக்கு உரிமை பெற்றுக் கொடுக்கும் விடயத்தை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்'' எனப் பதில் கூறினார்.

படைபலத்திற்கு அஞ்சி, தனது உயிரைப் பாதுகாப்பதற்காக தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுத்துவிடுவார் என்று எதிர்பார்த்த இந்திய ஆளும்வர்க்கத்திற்கு, அது நடைபெறாமல் போனது ஆச்சரியத்தையும், அதேவேளை ஆத்திரத்தையும் கொடுத்தது.

ஒடுக்கப்படும் இனத்தின் தலைவர்களுக்கு வசதிகளையும் சலுகைகளையும் வாரி வழங்கி அவர்களை வளர்ப்பு நாய் நிலைக்கு ஆளாக்கிவிட்டு அந்த இனத்தின் எழுச்சியை நசுக்குவது அல்லது இதற்கு உடன்பட மறுத்தால் அந்தத் தலைவர்களுக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களை அடிபணியச்செய்து, அவர்கள்மூலமாக அந்த இனத்தின் அடிமைச் சாசனத்தை எழுதுவிப்பது ....அல்லது அழிப்பு வேலைகளைச் செய்து அந்த இனத்தைப் பலவீனப்படுத்திவிட்டு, அதன்மேல் அரைகுறைத் தீர்வுகளைத் திணிப்பது.. ...இவைதான் காலாதிகாலமாக ஏகாதிபத்தியவாதிகளும் – ஆக்கிரமிப்பு சக்திகளும் வெற்றிகரமாகச் செயற்படுத்தி வந்த – வருகின்ற சித்தாந்தங்கள் ஆகும்.

ஆனால் இந்த ஏகாதிபத்திய சித்தாந்தங்கள் எதுவுமே, தலைவரிடம் எடுபடவில்லை.

சலுகைகளைக் கண்டு வாய் பிளக்கும் தலைவர்களிடமும், தனதும் தனது குடும்பத்தினதும் உயிர்களுக்கு அஞ்சி ஒரு தேசியத்தின் உயிரை அழியவிட விரும்பும் தலைவர்களிடமும்தான், அந்தச் சித்தாந்தம் எடுபடும்.

படைபலத்திற்கு அடிபணிந்து – உயிருக்கு அஞ்சி – தமிழினத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக் கொடுத்தார் என்ற வரலாற்று அவச்சொல்லை ஏற்க, தலைவர் பிரபாகரன் தயாராக இருக்கவில்லை; அதற்குப்பதிலாகச் சாவையும், பட்டினியையும், அழிவையும் ஏற்கவே அவர் தயாராக இருந்தார்.

தமிழ் இனத்திற்கு நிரந்தர விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதே தலைவரின் இலட்சியம்; அது முடியாவிட்டாலும், ''எவர்க்கும் அடிபணியாது விடுதலை கிடைக்கும் வரை தொடர்ந்து போராடு'' என்ற செய்தியையே அடுத்த சந்ததிக்குக் கொடுக்க, அவர் விரும்பினார்.

எனவேதான் இந்திய அரசு கொடுத்த அனைத்து நிர்ப்பந்தங்கள் – ஆபத்துக்கள் மத்தியிலும் தப்பிப் பிழைப்பதற்கு வழி ஒன்று இருந்த நிலையிலும், தலைவர் அவர்கள் ஆபத்தை விரும்பித் தேர்ந்தெடுத்தார் என்பது, எமது இன வரலாற்றில் முதற் தடவையாக நடந்துள்ளது.

இதுவரை நாளும் தமிழினத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் விட்ட தவறு யாதெனில், தங்களுக்கும் தமது குடும்பத்தவர்கட்கும் வரும் கஷ்டங்களை – ஆபத்துக்களை – நீக்குவதற்காக, இலட்சியத்தை – இனத்தை – எதிரிக்கு விற்றுவிட்டு அதன் பின்னர், அதற்கு நியாயங்கள் கற்பிப்பதிலேயே காலத்தைக்கழித்து வந்தனர்.

இந்தப் பழைய அரசியல் மரபுக்கு முரணாக தலைவர் பிரபாகரனின் செயற்பாடு அமைந்திருந்தது. எமது இனத்திற்கு வரும் எந்த ஆபத்துக்குமெதிராகப் போராடி வெல்வது அல்லது அப்போராட்டத்தில் வீரச்சாவடைவதே சிறந்தது என்ற விடயமே இந்தச் சம்பவத்தின் வாயிலாக எதிர்காலச் சந்ததிக்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்த செய்தியாகும்.

• • •

சலுகைகள், பணம் என்பவற்றைக் கொடுத்து இந்தியா எதை வாங்க முயற்சித்தது என்ற உண்மையையும், அதன் அபாயத் தன்மையையும், இந்திய மண்ணில் இருந்தபடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட எமது பிரதிநிதிகளுக்குச் சூசகமாகத் தெரிவிப்பதற்காக, தொலைத்தொடர்புசாதனம்மூலம் தலைவர் இப்படிச் செய்தியனுப்பினார் –

''நான் செத்தபிறகு, யாரென்றாலும் மொத்தமாகவோ சில்லறையாகவோ, இயக்கத்தையும் இனத்தையும் யாரிற்கும் விற்கலாம்.''

www.eelamview.com

மேஜர் கருணாகரனின் நினைவாக...

இங்கே கவனியுங்கள்

மேஜர் கருணாகரன் மட்டக்களப்பு மாவட்டம் மன்னம்பிட்டியைச் சேர்ந்தவர். 1973 – நொவெம்பர் 18 ஆம் நாள் பிறந்த இவரது இயற்பெயர் கணபதிப்பிள்ளை உபேந்திரன் என்பதாகும். பூநகரிக் கூட்டுத் தளம் மீதான புகழ் பெற்ற 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையின் போது விழுப்புண்ணடைந்ததால் கையொன்றின் இயக்கத்தை இவர் இழந்திருந்தார் என்பதும். அந்நிலையிலும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளராகப் பணியேற்றுச் சென்றார் என்பதும் சொல்லிக்காட்டக் கூடிய விடயங்களாகும். மேலும் சந்திரிகா குமாரதுங்கா சிறிலங்காவின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதை அடுத்து, தனது நலலெண்ண சமிக்ஞையைக் காட்டுவதற்காக புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்த அன்றுதான் (13. 11 .1994) நரிப்புல் தோட்டத்தில் சிங்களப் படையினர் ஒரு பதுங்கித் தாக்குதலை மேற்கொண்டு கருணாகரனை களப்பலியாக்கினர்என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒருவிடயமாகும்.

இங்கே -

தனது கண்ணெதிரில் உயிரீந்த ஒரு தோழனை எண்ணி அவர் எழுதிய நினைவுக் குறிப்பையும், கண்ணுக்கெட்டாத தொலைவில் - யாழ்ப்பாணத்திலிருந்த - தனது நண்பனுக்குஅவர் எழுதிய கடிதம் ஒன்றையும் - அவர் வரைந்த கடைசி மடல் - கீழே தருகின்றோம்.

உறுதிக்கு ஒரு உதாரணம்

எட்டாம் மாதம் 11 ஆம் திகதி, இரவு 9. 30 மணி - தாக்குதலணிக்குரிய போராளிகள் அணியணியாய் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். இரவு 11. 30 இற்குத் தாக்குதலை ஆரம்பிப்பதாகத் திட்டம். 10. 45 இருக்கும். ''சுது சுது'' என தளபதி ராம் அண்ணன் கூப்பிடுகிறார் ''என்னமாதிரி, சந்தித்துவிட்டீர்களா?''

''இல்லை சந்திப்போம் –'' இது – சுது அண்ணன்.

''றோமியோ மைக் யோகன். சொல்லுங்கோ.''

''நாங்கள் அந்த இடத்துக்கு போயிட்டம்'' என்கிறார் யோகண்ணன்.

''சொன்ன நேரத்துக்கு அந்த இடத்துக்குப் போங்கோ'' – இது ராம் அண்ணன்.

நேரம் செல்லச் செல்ல எல்லோரது நெஞ்சும் படக்படக்கென அடித்துக் கொண்டது. நகரும்போது எதிரி கண்டுவிட்டால் சண்டை குழம்பிவிடும். மூன்று பக்கமும் வயல்வெட்டை. ஒரு பக்கம் குளமும் காடும். வெட்டையால் நகருவது என்றால் மிகவும் கடினம்.

நேரம் 11.30. ''சுது சுது குடுங்க குடுங்க யோகன், யோகன் குடுங்க'' என்று ராம் அண்ணன் கூறுகிறார். ஆனால் சண்டை தொடங்கவில்லை. எதிரி உசாராகாதபடியால் போராளிகள் சிலர் முகாமுக்குள்ளே புகுந்துவிட்டார்கள்.

சண்டை தொடங்கிவிட்டது. மற்றைய இடங்களில் 'ரோப்பிற்றோ' பெரும் சத்தத்துடன் வெடித்தது. கண்ணன் என்ற போராளியும் தடை அகற்றும் அணியில்தான் இருந்தான். 'ரோப்பிற்றோவை' ஓடிப்போய் சுருள் கம்பிக்குள்ளே புகுத்தினான்; அதோடு சேர்ந்து அவனும் அதற்குள்ளே சிக்குண்டான். ஒன்றுமே செய்யமுடியாது. தடையை அகற்றிக் கொடுத்தால்தான் போராளிகள் உள்ளே புகுந்து முகாமைக் கைப்பற்றுவார்கள். யோசிக்க நேரமில்லை. கண்ணன் பலம்கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தான்; ஆனால் விடுபட முடியவில்லை. தான் வீரச்சாவடைந்தாலும் தடையை அகற்றிக்கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, ''கிட்ட வராதிங்கடா.. கிட்ட வராதிங்கடா'' என்று கத்திக்கொண்டு, 'ரோப்பிற்றோ'வின் சேப்ரிபின்னை இழுத்தான் கண்ணன்.

நிலை எடுத்திருந்த போராளிகள் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்தனர். 3 செக்கன்கள். ஒரு ஒளிப்பிழம்பு. அதைத் தொடர்ந்து 'டமார்' எனப் பெரிய சத்தத்துடன் 'ரோப்பிற்றோ' வெடித்தது; 25 மீற்றருக்கு கம்பிகளைச் சுருட்டி எறிந்தது. கண்ணன் சின்னச் சின்ன சதைத் துண்டுகளாகச் சிதறினான். 10 மீற்றருக்கப்பால் படுத்திருந்த போராளிகளின் மேல் கண்ணனின் இரத்தமும் சதைத்துண்டுகளும் பட்டு வழிந்தன.

முகாமைக் கைப்பற்றும் நோக்குடன் விரையும் போராளிகளை தன் செந்நீரால் குளிப்பாட்டி வழி அனுப்பினான் கண்ணன். அவன் செய்த அந்தத் தியாகத்தால், நாங்கள் கட்டுமுறிவு இராணுவ முகாமைக் கைப்பற்றி, ஆயுதங்களையும் எடுத்துவர முடிந்தது. பின் முகாமைக் கைவிட்டுவரும்போது, கம்பிக்கருகில் கண்ணனின் சிதைந்த உடலைப்பார்த்து எல்லாரும் திகைத்துவிட்டோம். ஓ ..! அந்த வீரனின் தியாகத்தை எண்ணி சில வரிகள் எழுதுகிறேன்.

க. கருணாகரன்

கல்லறையில் அல்லது பாசறையில் சந்திப்போம்

என் அன்பின் சுதாவுக்கு! நாங்கள் அனைவரும் நலமே; உங்கள் நலமறிய ஆவல்.

நான் பிராஜ் அண்ணையிடம் அனுப்பிய மடல் கிடைத்திருக்குமென நினைக்கின்றேன். ஏன் பதில் அனுப்பவில்லை? ஒரு கடிதம் எழுதுவதென்றால். எங்களுக்கு நான்கு நாள் பிடிக்கும். சிறிது ஓய்வு நேரத்தில்தான் எழுதவேண்டும். இடம் மாறி மாறி நிற்பதால் ஓரிடம் என்று இல்லை. விளங்கும்தானே! எழுதிமுடிந்தால் அனுப்புவது கஸ்டம்.

அடுத்து இங்கு ஒரு பிரச்சினையும் இல்லை. இறைச்சிக்கு மட்டும் பஞ்சமில்லை. சலசலக்கும் அருவிகளும், ஊ... ஊ... என்ற சத்தத்தை உண்டாக்கும் அடர்ந்த காடுகளும், பெரிய மலைகளும்தான் நாங்கள் இருக்கும் இடம். மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. காலையில் சூரியன் உதிக்கும் காட்சி, மிருகங்கள் ஓடித்திரியும் காட்சி, பறவைகளின் கூச்சல்... அப்பப்பா! எதை ரசிப்பது? நீங்கள் ரவுணைப்பார்க்க ரவுணுக்குத்தான் செல்ல வேண்டும். நாங்கள் மலையேறிப் பார்த்துவிடுவோம். சுதா! நானும் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது சொகுசாகத்தான் இருந்தேன். ஆனால் அதைவிட சொகுசாக இங்கு இருக்கலாம். ஆனால் இந்தக் காற்றும் மனதுக்குப்பிடித்த இயற்கைக் காட்சிகளும் ஒருமனநிம்மதிதான். சுதா! நீ இங்கு இருந்தனிதான். ஆனால் இப்படியான காட்சிகளை ரசித்திருக்கமாட்டாய், எதற்கும் கொடுத்துவைக்கவேணும்.



நாங்கள் சத்தம்போட்டுக் கதைப்பதில்லை. கூடுதலாகக் கைப்பாசைதான். ஒருவரோடு ஒருவர் வீணாக அலட்டுவதில்லை. நீங்கள் இரவானதும் படுக்க ஆயத்தமாவீர்கள். நாங்கள் நடக்க ஆரம்பிப்போம். விடிந்தால் நீங்கள் நித்திரைவிட்டு எழும்புவீர்கள். நாங்கள் அப்போதுதான் படுப்போம். நீங்கள் சத்தம்போட்டு பயிற்சியெடுப்பீர்கள்; நாங்கள் மௌனமாகப் பயிற்சி எடுப்போம். இவைகள்தான் வித்தியாசம். வேறு என்ன, எல்லாம் வழமைபோலத்தான்.

சுதா! காலத்தின் தேவை பிரிந்தோம்; இதயத்தால் அல்ல, இடத்தால். என்றோ ஒரு நாள் கல்லறை அல்லது பாசறை நம் சந்திப்புக்காகக் காத்திருக்கும்.

இப்படிக்கு,
க- கருணாகரன்,

www.eelamview.com

‘த’ தரும் வரலாறு

‘த- 1272’

- இந்த இலக்கத்தோடு எங்களை விலத்தியபடி ஒரு வாகனம் அந்த நெடுஞ்சாலையில் விரைந்து போய்க்கொண்டிருக்கின்றது!

அதனை உற்றுப்பார்க்கின்றேன்.

அந்த வாகனத்தையா?

இல்லை, அந்த வாகனத்தின் இலக்கத் தகட்டை!

இன்னும் சரிவரச்கூறின், அந்தத் தகட்டையும் அல்ல; அதில் பொறித்திருந்த ‘த’ எனும் தமிழ் எழுத்தை!

அந்த வாகனம் மேலும் விரைந்து இப்போது அந்த நெடுஞ்சாலைத் தொலைவில் மறைந்துவிட்டது. ஆனால் அந்தத் ‘த’ எழுத்து என் நினைவுகளையெல்லாம் தட்டி நெஞ்சத்தில் அலைமோதச் செய்கின்றது!

‘த - 1272’

இன்று இதனை ஓர் இயல்பான காட்சியாய் காண்கிறோம்; ஆனால் அன்று...... கடந்த 38 வருடங்களிற்கும் மேலாக தமிழர்களாய் வாழத் தமிழ் மக்கள் பட்டுவந்த துன்பம், வேதனை – இடையிடையே அவமானம் - இதைத் தொடர்ந்த விழிப்புக்கொண்ட போராட்ட நிகழ்வுகள், புதுத் திருப்பங்களின்போது எழுந்த இழப்புக்கள், ஈகங்கள் கொஞ்சமா......?

“பன்னிரண்டு வயதில்
தோளிலே துப்பாக்கி
எங்கேஅவன் செல்கிறான்?”

தமிழீழத்தில் இன்று நிலவும் இந்தப் பாடலும், வீறும், இதை நேரிற் காட்டிநிற்கும் நிலையும் இலேசில் எழுந்தவை அல்ல.

‘ஒருவன்’ அல்ல, அதோ இரண்டு வீராங்கனைகள் மோட்டார் சைக்கிளில் போகின்றார்கள். அதில் பின்னுக்கு இருப்பவளின் தோளில் உள்ளது துப்பாக்கி.

இவ்விதம் தமிழீழம் உருவாகிக்கொண்டிருக்கின்றது!

ஆனால் அன்று?

அந்த 38 வருடங்களிற்கு முன்பு, 1956 யூன் 5 ஆம் நாளின் காட்சி, மனதில் உயிர்கொண்டு எழுகிறது.

இடம்: கொழும்பு காலிமுகத் திடல் -

இதன் அருகேதான் நாடாளுமன்றம். இந்த நாடாளுமன்றத்திலேதான் சிங்களம் மட்டும் சட்டம் அந்த 5. 6. 56 இல் பிறப்பிக்கப்பட உள்ளது.

இதனை எதிர்த்து அந்தக் காலிமுகத் திடலில் தந்தை செல்வாவும் மற்றும் உறுப்பினரும், வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து வந்த பெருந்திரளான தொண்டர்களும் அமர்ந்திருக்கின்றனர். மொழி உரிமை கோரி அங்கு சத்தியாக்கிரகம் நடைபெறுகின்றது.

அதன்பின் நடந்தது என்ன?

நேரம் செல்லச்செல்ல சிங்களக் காடையர் கூட்டம் அங்கு வந்து சேருகிறது.

‘சுற்றிவளைத்து நின்ற காடையர் கூட்டம், சத்தியாக்கிரகிகளின் மீது சரமாரியாகக் கற்களை வீசியது.

அமர்ந்திருந்த சத்தியாக்கிரகிகளுக்குப் பலத்த அடியும், உதையும்.’ - இதையும் இன்னும் கூடிய செய்திகளையுமே அன்றைய நாளிதழ்கள் தந்து நின்றன!



அன்றைய சத்தியாக்கிரக ஒழுங்கு விதிகளில் ஒன்றை, இன்றும் உள்ள சுதந்திரன் 3. 6. 56 இதழில் படிக்கின்றேன். அனுதாபத்தையும் வேதனையையும் தரும் அந்த உபவிதி 5 இதுதான்:

“அடிதடி அல்லது தாக்குதல் ஏற்பட்டால், இரு கரங்களையும் கட்டிக்கொண்டு, குனிந்த தலையுடன் அமைதியாக இருக்கவேண்டும். அவசியம் ஏற்பட்டால் ‘தமிழ் வாழ்க’, ‘தமிழ் வெல்க’ என மட்டும் கோஷிக்கலாம்.”

அந்தச் சத்தியாக்கிரகிகளின் கூட்டத்தில், மன்னார் மருசலீனும் ஒருவராக இருந்தார்; ஆனால், 30வருடங்களின் பின் அவரது மகனான விக்ரர் செய்யத் தொடங்கிய சாதனைகள் நெஞ்சத்தில் நிழலாடுகின்றன!

மீண்டும் மீண்டும் அந்த ‘த’ எழுத்தே நெஞ்சில் தவழுகின்றது; சிறீ எதிர்ப்புப் போராட்டங்களை நினைவுபடுத்துகிறது!

1958 சித்திரை 10, 11ஆம் திகதிச் செய்தி இதழ்களை மீண்டும் என் கைகள் புரட்டுகின்றன. தமிழ்த் தலைவர்கள் அரச காவல்துறையினரால் கைது!

இது எதற்கு?

தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சிங்கள ‘ஸ்ரீ’ பேருந்து வாகனங்களில் இத் தலைவர்கள் தமிழ் ‘சிறீ’ எழுத்தைப் பொறித்தமைக்கு! பெரும் கிளர்ச்சியாய் அவ்வேளை எழுந்த ‘தமிழ் சிறீ’ போராட்டத்திற்கு சிங்கள அரசு காட்டிய நடைமுறை இதுதான்!

யூலை 1957 இல் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ‘பண்டா செல்வா ஒப்பந்தத்தைச்’ செய்த பிரதமர் பண்டாரநாயக்கா அவர்களே தனது கையால், ஏப்ரில் 1958 இல் அதனைக் கிழித்தெறிந்தார்; இல்லை, 1958 இனக்கலவரத்தைத் தொடக்கிவைத்தார் எனலாம்.

தாக்கப்பட்டது ஆயிரமாயிரம் தமிழ்க் குடும்பங்கள் மட்டுமல்ல; கொழும்புக் கடையொன்றில் ‘தினகரன்’ விளம்பரப் பலகையிலிருந்த தமிழ்எழுத்தைக் கண்ட குண்டர்கூட்டம் அதற்குத் தார் பூசிச் சென்ற உதாரண சம்பவத்தை, தார்சி விதாச்சி எனும் பிரபல ஆசிரியர், தமது அவசரகாலச் சட்டம் 58 (Emergency 58) எனும் நூலில் குறிப்பிடுகிறார்! இங்கு தமிழ்ப் பகுதிகளில் இன்னும் பெரும் பேயாட்டம்!

இதனால் தமிழ் அழிந்ததா? 1956, 57, 58, 61, 64 எனத் தொடர்ந்த அன்றைய தமிழ் உரிமைக் குரல்கள் மறுக்கப்பட்டதால் இன்று தமிழ் அழிந்துவிட்டதா? தமிழீழம் ஒழிந்துவிட்டதா?

இன்னும் பல்லாயிரம் பலங்கொண்டு தலை நிமிர்ந்து நிற்கிறது.

அன்று 5. 6. 56 இல் அமைதிச் சத்தியாக்கிரகிகளில் ஒருவராக மன்னார் மருசலீன்; அதன்பின் சரியாக 12 10.86 இல் களமாடி எதிரிகளைத் தாக்கிய மாவீரர்களில் ஒருவனாக அவரது மகன் விக்ரர்! இவ்விதம் எண்ணற்ற வீர வேங்கைகள்.

வரலாற்றின் திருப்பத்தை இந்தக் கண்ணாடியிற் பார்க்கிறோம்! இது தேடாமற் கிடைத்தது அல்ல; வரலாற்று ஈகங்கள் இல்லாது வந்ததும் அல்ல!

இரங்கற் தொனியையல்ல, ஏக்க ஓலத்தையும் அல்ல, வேட்டு ஒலியைக் கேட்ட பின்னரே எதிரி திரும்பிப்பார்க்கத் தொடங்கினான்!

சிங்கள சிறீயுடன் வந்த பேருந்துகளை இளைஞர் சிலர் (டைனமற்) வெடிமருந்து வைத்துத் தகர்த்த வேளையிலும், “சிறீ பஸ்களையே அனுப்புங்கள்” என அமைச்சர்களுக்குத் தந்திகொடுத்த குழுக்களும் இங்கு இருந்தன! அந்தப் பிரபல வரிசையின் பலர் இன்றில்லை!

இங்கு நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது 9 பொதுமக்களைப் பலிகொண்ட யாழ் பொலிஸ் நிலையம், இன்று குட்டிச் சுவராயும் கற்குவியலாயும் காட்சி தருகிறது!

எதிரியின் முகாங்கள் முடங்கின! தகர்ந்தன!

டிசெம்பர் மாதம் இதே காலிமுகத் திடலில் ‘போர் நிறுத்தம் - சமாதானம்’ என்று பெருங்கூட்டமும், ஊர்வலமும் நடைபெற்றுள்ளன! இது அதே கொழும்புச் செய்தி!

இதே காலிமுகத் திடலில், சமாதானம் - சம உரிமை - கேட்ட தமிழன் சத்தியாக்கிரகம் செய்தபோது கிடைத்தது அடி - உதைதான்! இப்போது அதே காலிமுகத் திடலில் சமாதானம் வேண்டிப் பெருங்கூட்டம், அமைதி ஊர்வலம்! இதைச் செய்தவர்கள் தமிழர்கள் அல்ல, சிங்களவர்கள்!

இது ஒரு யுகப் புரட்சி!

எமது தலைவன் பிரபாகரன் ஆக்கிய புரட்சி இது!

இந்தச் சூழலிலேதான் சிங்கள சிறீ எழுத்தல்ல, அதே ‘சிறீலங்கா’வைக் குறிக்கும் தமிழ் சிறீ எழுத்தும் அல்ல, தமிழீழத்தைக் கூறி நிற்கும் ‘த’ எழுத்து வாகனங்கள் எம் மண்ணில் உலவியபடி, புதுயுகத்தை உணர்த்துகின்றன!

“இனித் தமிழினம் குனியாது - எமை எதிர்த்திடப் பகை துணியாது!”

- நாக. பத்மநாதன் ○

தோற்காத படை.....

- அகில இந்திய வானொலி

நிகழ்ச்சி : சிறுவர் சோலை
இயக்குநர் : வானொலி அண்ணா
காலம் : 04 - டிசெம்பர் - 1994
நேரம் : பி. ப. 2. 30 மணி

ஒரு மாணவன் கேட்கிறான் -
“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?”
மற்றொரு மாணவன்
மெதுவாகப் பதில் சொன்னான் -
“புலிப்படை வெல்லும்!”
இப்போது ஏனைய மாணவர்கள்
கைகொட்டி மகிழ்கின்றார்கள்!

www.eelamview.com

இறப்பினும் மறவோம்; இலக்கினில் தவறோம்!

திரும்பிப் பார்க்கின்றோம் -

சுதந்திரத்தின் சிகரத்தை நோக்கிய எங்கள் நெடும் பயணம், கண்ணுக்குள் விரிகிறது அந்த நெடுவழிப்பாதை. எழ எழ விழுந்து, விழ விழ எழுந்து......எத்தனை இன்னல்கள், எத்தனை சவால்கள், எத்தனை அழுத்தங்கள், எத்தனை குழிபறிப்புகள்...... எல்லாவற்றையுமே எகிறிக் கடந்து எழ எழ விழுந்து .....விழ விழ எழுந்து......

திரும்பிப் பார்க்கின்றோம் -

இரத்தத்தையும், சாம்பர்மேடுகளையும், சவப்பெட்டிகளையும் தமிழனுக்குத் தந்தவர்களின் தலைவாசல்களுக்கு - கண்ணீரையும், கதறலையும், துன்பப்படுவதென்றால் எப்படி இருக்குமென்பதையும் தமிழன் திரும்பவும் பரிசளித்து......

திரும்பிப் பார்க்கின்றோம் -

தேடிப்போய்க் கையேந்தி நின்ற தமிழனை அடித்து விரட்டியவர்களை, தேடி வந்து கையேந்தி நின்று தமிழனிடம் ''அடிக்காதீர்கள்'' என இரக்க வைத்து......

திரும்பிப் பார்க்கின்றோம் -

வீழ்ந்துபோய்க் கிடந்த தமிழனின் வரலாறு எங்களுக்குத் தந்த ஒரு தலைவன், எழுச்சியாய் நிமிரும் புதியதோர் வரலாற்றைத் தமிழுக்குத் தந்து நிற்க......

திரும்பிப் பார்க்கின்றோம் -

ஆகா .....!என்ன ஒரு ஆச்சரியம்......! எங்களையே அசத்திவிட்ட அதிசயம்......! நம்ப முடியாமலல்லவா இருக்கின்றது......எப்படி இதுநிகழ்ந்தது......? பிரமிக்கவைக்கிறதே......! நினைக்கையில் உயிர் சில்விடுகின்றது......நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க, எங்கள் கண்களுக்கு முன்னாலேயே......இது ஒரு கால மாற்றமா? இல்லை.

இது மாற்றப்பட்ட காலம்!

திரும்பிப் பார்க்கின்றோம் -

இந்தப் புதுயுகத்தின் பிரசவத்திற்காக எங்கள் தேசம் செலுத்திய விலைமதிப்பற்ற பெறுமதி......

ஒன்றா ...இரண்டா .... அத்திவாரக் கற்களாக, தாங்கும் தூண்களாக, உச்சியின் முகடுகளாக, முகடுகளின் கிரீடமாக, கிரீடத்தில் பதித்த முத்துக்களாக......தேசத்தின் நிர்மாணிப்பிற்காக நாங்கள் இழந்த இரத்தக்கனிகள்...... 6912+......

சாதாரண சகவாழ்வின் பற்றுதல்களை உதறியவர்கள்; தனிப்பட்ட சுய வாழ்வின் இலட்சியங்களைத் துறந்தவர்கள்; இனிய இளமை வாழ்வின் கனவுகளை மறந்தவர்கள்; தங்கள் அறிவு, ஆற்றல்கள், திறமைகள் அனைத்தையும் தாயக மண்ணுக்காய்த் தந்தவர்கள்; மக்களின், விமோசனத்திற்காக மரணத்திற்குள் வாழ்ந்தவர்கள்.

போர்முனைகளிலும் அவற்றுக்கு அப்பாலும் நாங்கள்சாதித்த ஒவ்வொரு மகத்தான வெற்றிக்காகவும், உயிர்த்துடிப்போடு உழைத்து விழிமூடிய எங்கள் நெஞ்சினிய நண்பர்கள்.

தமிழீழத்தை - தமிழனுக்கென்றோர் தனியரசை - தமிழினத்தின் தன்னாட்சியை - மட்டுமே. ஆத்மார்த்தமான தாகமாகத் தங்களது ஆன்மாவில் சுமந்தவர்கள்; அதற்காகவே வாழ்ந்தார்கள் - போராடினார்கள்; வீழ்ந்தார்கள்.

45 ஆண்டுகளாக இறுமாந்துகொண்டிருந்த சிங்கள தேசத்தின் பேரினவாதச் சிந்தனைக்கு, தாயக மண்ணில் புலிகள் கொடுத்த மிகப் பெரிய அடி - 'ஒப்பறேசன் தவளை.'

அந்தக் களத்திலும் வீழ்ந்து, அந்தக் களத்திற்காகவும் வீழ்ந்து, பூநகரியில் - சரித்திர வெற்றிக்கு மகுடம சூட்டினார்கள் எங்கள் நெருப்புக் குழந்தைகள்.

அந்த மாபெரும் களத்தில் நாங்கள் செலுத்திய விலைகளில் ஒன்று, லெப்ரினன்ற் கேணல் குணா.

* * *

குணா!

தென்மராட்சி மண் எங்கள் தந்தையர் தேசத்திற்குத் தந்த ஒரு தலைசிறந்த புரட்சிவீரன்.

தமிழீழப் போர் வானில் ஒரு நம்பக்கை நட்சத்திரமாக மெல்லென ஒளிர்ந்த படைத் தளபதி.

பாசம்மிக்க மக்களின் உள்ளங்களை ஊடுருவி, அன்போடு வீசிய குளிர்ந்த காற்று.

நாங்கள் அவனோடு இருக்க விரும்பினோம் என்பதை விடவும், அவனைப் போல இருக்க விரும்பினோம் என்பதே சரியானது.

ஐந்து அடி பத்து அங்குல உயரத்தில் அந்த ஆஜானுபாகுவான 'இராணுவக் கட்டுடல்', சதா புன்னகைத்துக்கொண்டு குதூகலமாய்ப் பழகும் அந்த நிலவு முகம், சுருள் சுருளாகப் படர்ந்து தவழும் அந்தத் தலைமுடிகள், பார்க்கின்றவர்களை வசீகரித்துவிடுகின்ற அந்த மிடுக்கான தோற்றம், எங்களை மெய்மறந்து பார்க்கவைக்கும் ஒய்யாரமான நடை, அளவான பேச்சு, அமைதியான சுபாவம், விரைவான செயல், பண்பான அணுகுமுறைகள்......எங்கள் கண்களுக்குள் நிறைந்து நிற்கின்றது அந்த வண்ணக் கோலம்.



லெப்ரினன்ற் கேணல் குணா!

அவனோடு இருக்க நாங்கள் விரும்பியதை விடவும் , அவனைப் போல இருக்கத்தான் நாங்கள் விரும்பினோம்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் - திருநெல்வேலித் தாக்குதலுடன் போராட்ட வளர்ச்சிப்போக்கு புதியதொரு பரிணாமத்திற்குள் பிரவேசித்த காலகட்டத்தில்தான், விஜயராஜா என்ற அந்த இருபது வயது இளைஞனும் விடுதலைப் புலியாகி வந்தான்.

கல்வயல் அவனுடைய ஊர்; ஒரு விவசாயக் கிராமம். பச்சைப் பசேலென்ற மேலாடை அந்த நிலத்தின் சிறப்பழகு குச்செம்முங்கைகளின் புழுதியில் ஓடி, வயற்சேற்றில் விழுந்து, செல்லையா அப்புவின் காணிக்குள் இளநீருக்குப் பாய்ந்து கலைபட்டு, பன்றித்தலைச்சி அம்மன் திருவிழாவில் கூத்தடித்து, சாவகச்சேரி நகரப் பாடசாலையில் பாடப் புத்தகங்களோடு பக்கத்து வாங்குப் பிள்ளைகளையும் கவனித்து -

சின்ன வயதில் அந்த ஊர் அவனுக்குச் சொந்தம்; வளர்ந்த பின்னர் அவன் இந்தத் தேசத்திற்குச் சொந்தம்.

புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிப் பாதையில் போராட்டம் எடுத்த இன்னொரு புதிய வடிவமாக, பிரதேச ரீதியாக சிற்றூர்ப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு - போராட்டத்தை மக்கள் மயப்படுத்தவும், மக்களைப் போராட்டமயப்படுத்தவும் - அரசியல் வேலைத்திட்டங்கள் தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்தில், குணா கல்வயலிற்கு நியமிக்கப்பட்டான்.

அப்பொழுது கடமையிலிருந்தவர்களுள் சிறந்த பணியாற்றிய பிரதேசப் பொறுப்பாளர்களில் ஒருவனாக அவன் திகழ்ந்ததும், ஆனையிறவிலும் நாவற்குழியிலும் 'ஆமி' வெளிக்கிட்டதாக 'வோக்கி' அறிவித்தபோதெல்லாம் அந்தக் களங்களில் விரைந்து திறம்படச் சண்டையிட்டதும், அவனது பற்றுறுதியும், அவனது வீரமும் துணிவும் - தளபதி கேடியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான முன்னணிப் போராளிகளுள் ஒருவனாக அவனை உயரச் செய்தன.

அந்த நம்பிக்கை - இயக்கத்தின் அதி முக்கியமானதும்; இரகசியமானதும், தலைவருக்குரியதுமான சில பொறுப்புக்களை அவனது தலைமேல் சுமத்தியது. ஒப்படைத்த வேலைகளில் அவன் காட்டிய ஈடுபாடும், ஓய்வற்ற கடும் உழைப்பும் - தலைவரிடத்திலும், கிட்டண்ணையிடத்திலும் பாராட்டையும் நற்பெயரையும் பெற்றுத் தந்ததுடன் - குணாவை இனங்காட்டியும்விட்டன.

கைதடியில் வெடித்த குண்டு - பொன்னம்மான், வாசுவோடு - தளபதி கேடியை எம்மிடமிருந்து பிரித்துவிட, தென்மராட்சியில் மந்தமாகிப்போன போராட்டப் பணிகளுக்கு புத்துயிர்ப்புக் கொடுத்து, மீளவும் வளர்ச்சப் பாதையில் இட்டுச்சென்ற பெருமை குணாவைத்தான் சேரும்.

ஏற்கெனவே சண்டைகளில் அவன் நின்றவன் தானென்றாலும், நெல்லியடி வரலாற்றுக் களம் தான் அந்த வீரனுக்கு சொல்லக்கூடிய முதற் சண்டை. இன்றைய உலகில வியப்புக்குரியதாகி, சிங்கள தேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் கரும்புலிகளின் சகாப்தத்தை மில்லர் என்ற மாவீரன் இடி முழக்கத்தோடு தொடக்கிவைத்தபோது - தென்மராட்சிப் படையணிக்குத் தளபதியாக, குணா அந்தக் களத்திலிறங்கினான்.

காலச் சக்கரத்தின் சுழற்சி; இந்தியப் படையின் தரையிறக்கம்; இசைந்துகொடுத்தே ஆக வேண்டியிருந்த ஒரு நிர்ப்பந்தம். மாறுபட்ட ஒரு வடிவத்திற்குள் இட்டுச்செல்லப்பட்டது போராட்டம். மாயைத் திரை கிழிந்து, உண்மை வெளிப்பட நாங்கள் காத்திருந்த நாட்கள்.

இந்தியா ஆக்கிரமித்ததற்கும் - அது சண்டையை ஆரம்பித்ததற்கும் இடைப்பட்ட அந்தக் காலம் மகா முக்கியமான, மறைமுகமான பணியொன்று அவனது மடியில் சுமத்தப்பட்டது. குணா மாடாய் உழைத்தான்.

ஆயுதங்கள் -

விடுதலைப் போராட்டத்தின் உயிர்நாடி; தேசத்தின் அசைக்க முடியாத இரும்புக் கவசம்; அன்று நாங்கள் பேசப்போனபோது அவர்கள் அதைத் தூக்கினார்கள் - பின்பு நாங்கள் அதைத் தூக்கியபோது அவர்கள் பேச வருகின்றார்கள். வரலாற்றைத் தலைகீழாக்கிய செம்புகோல்கள். படையியல் அரங்கில் போரிடும்போதும் சரி, அரசியல் மேசையில் பேசிடும்போதும் சரி, ஆயுதங்களே தமிழனின் பலம்; ஆயுதங்களே தமிழனுக்கு 'வாழ்வு'; ஆயுதங்களே தமிழனின் 'எதிர்காலம்'. ஆயுதங்களை நாங்கள் கைவிட முடியாது - ஒருபோதுமே கைவிடப்போவதில்லை.

தேசத்தின் முதுகெலும்பான ஆயுதங்களை, பக்குவமாய்ப் பாதுகாக்கவேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பு, அன்றைய சிக்கலான சூழ்நிலையில் குணாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

எவ்வளவுக்கெவ்வளவு அது முக்கியத்துவம் வாய்ந்ததோ அவ்வளவுக்கவ்வளவு அது இரகசியம் மிக்கது; எனவே, அந்தரங்கமாக மேற்கொள்ளப்படவேண்டிய மிகமிகச் சிரமமான ஒரு செயற்பாடு அது சில சமயங்களில்தான் அவன் அடுத்தவர்களை உதவிக்கு நாடினான். பெரும்பாலும், அவன் தனியாகவேதான் குணா சளைக்கவில்லை-சலிக்கவில்லை. இந்தியர்களின் கழுகுப் பார்வைக்கு மறைந்து - ஒழுங்கான உணவின்றி, போதுமான உறக்கமின்றி - அவன்பட்ட கஷ்டங்களை நாங்கள் பார்த்தோம்; அவன் சந்தித்த துன்பமும் துயரமும் கொஞ்சமல்ல.

திலீபனை இந்தியர்கள் கொன்று, கண்ணன் தனத்தோடு இன்னும் கொஞ்சப்பேரை இந்தியர்களோடு வந்தவர்கள் கொன்று, புலேந்தி அம்மான், குமரப்பா, தென்மராட்சியின் அப்துல்லாவோடு பன்னிருவரை இந்தியர்களும் சிங்களவர்களுமாகச் சேர்ந்து கொன்று......வரலாற்றுக் காற்றின் வீச்சு, மக்களில் கவிந்திருந்த மாயைப்புகையை மெல்லக் கலைத்துச் செல்ல-

1987, ஒக்ரோபர் - 10.

சரித்திர நாள்.

ஓரோசையும் அற்று உறங்கிய இரவு பேரோசையோடு விடிந்தது.

'பூமாலை' யோடு வந்தவர்கள் இங்கு ஒரு 'புயற்காற்றை' வீசச் செய்தார்கள்.

அன்பில் முத்தமிட என வந்த அமைதித் திரை கிழிந்து - கண்ணில் யுத்தமிடும் வெறி கொண்டது ஆக்கிரமிப்புப் பூதம்.

'றோ' கொடுத்த தகவலின்படி திட்டம் போட்டார்கள் -' 750 பேருக்கு 72 மணித்தியாலங்கள்.'

யாழ்ப்பாணக் கோட்டையில் ஆரம்பித்து, அம்பாறைத் திருக்கோவில் வரை வியாபித்து, மணலாற்றுக் காட்டில் 'முதல் அத்தியாய'த்தை தலைவர் முடித்துவைத்தபோது - இரண்டரை

www.eelamview.com



ஆண்டுகளின் பின், வல்லரசுப் படைகள் மூட்டை கட்டிக்கொண்டு வெளியேறின.

போரியல் சரித்திரத்தில் பொறிக்கப்பட்ட அந்த இந்திய - புலிகள் யுத்தம், அந்த வீரனை முழுமையாக இனங்காட்டிய நெருப்பு நாட்கள்.

முற்றுகைகள்; சுற்றிவளைப்புகள்; காட்டிக் கொடுப்புகள்; திடீர்ச்சண்டைகள்; கலைபாடுகள்; தப்பி ஓடல்கள்...... எல்லாவற்றுக்கும் மத்தியில் நின்று, தென்மராட்சியில் புலிகளின் நாடித்துடிப்பாக இயங்கியவன் குணா தான்.

அவனது உறுதி, அவனது துணிவு, அவனது வீரம், அவனது நம்பிக்கை, அவனது வழி நடாத்தல், ஒட்டுமொத்தமாக அவனேதான் - அத்துணை நெருக்கடிகளுக்கும் மத்தியில் அங்கு புலிகளை நின்று நிலைக்கச்செய்து, தழைத் தோங்கி வளரச் செய்தான்.

'சயனைட்'டை நம்பியே விடிந்துகொண்டிருந்த அன்றைய நாட்கள்; அடுத்த காலையில் உத்தரவாதமற்றுப் பதுங்கப்போகும் இரவுகள்; மரணம் உயிரை உரசிய சமயங்களில், குப்பியைப் பிடித்துக்கொண்டு தப்பித்து மீண்ட மயிரிழைப் பொழுதுகள்; நாளுக்கு நாள் வீழ்ந்துகொண்டிருந்த அன்புத்தோழர்கள் -

கனகம் புளியடியில் பதுங்கிப்பிடித்த பகைவனின் கைகளில் கீதன் விழிகளை மூட, கல்வயலில் ரோந்துப் படையிடம் அகப்பட்டு நகுலன் குப்பிகடிக்க, கொடிகாமத்தில் எதிர்பாராமல் மாட்டுப்பட்டு ரேகா சன்னங்களை ஏந்த, அல்லாரையில் முற்றுகைக்குள் சிக்கி புரோப்ளர், தனக்கே குண்டுவைக்க, மிருசுவில் அதிரடித் தாக்குதலில் கில்மன் களப்பலியாக, கச்சாய் வீதியில் இட்டுமுட்டாய் அகப்பட்டு நிதி வீழ்ந்துபோக, சரசாலையில் எதேச்சையாய் மாட்டிக்கொண்டு வின்சன் நஞ்சு தின்ன, பளையில் சுற்றிவளைப்பிற்குள் வேல்ராஜ் சயனைட் அடிக்க, உசனில் பதுங்கித் தாக்குதலில் அக்பர் வீழ்ந்துபோக, நாவற்குழிச் சுற்றிவளைப்பில் அருள் குப்பி கடிக்க .....

ஒவ்வொன்றாய் ஒவ்வொன்றாய் எங்கள் செல்வங்கள் விழவிழவும் குலையாத மலையாக இறுகிக்கொண்டே போனான் அந்தத் தளபதி.

நெருப்புக்குள் நின்றும் நீறாகிப்போகாமல் நிமிர்ந்த அந்த வீரன், எங்களையும் நிமிரச் செய்தான்.

வேம்பிராய்ச் சந்திக் கும்மிருட்டில், ''தம்பி!'' என்று சைக்கிளில் எட்டிப் பிடித்து மறித்தவன் 'பீடி'யை உறிஞ்சியபோது, வெளிச்சத்தில் பார்த்தால், சீக்கிய முகம்! சைக்கிளால் தூக்கி அடித்துவிட்டு, குணா வேலியால் பாய்ந்தோடிய போது துப்பாக்கிகள் உறுமின!

கெருடாவில் வீதியில் போனபோது எதிரே வந்தது இந்திய ஜீப்; பக்கத்து ஒழுங்கையால் மெதுவாகத் திரும்பி தப்பிப்போக முனைகையில், வந்து திருமபிய ஜீப்பிலிருந்து முழங்கத் துவங்கியது 'பிறண்'! இந்தியர்கள் கலைத்துச்சுட, இவர்கள் வலிந்து ஓட, இளைத்து இளைத்து ஓடி முள்ளுக் கிழித்து இரத்தம் ஒழுக, இயலாமல் விழுந்த பாப்பாவையும் இழுத்துக்கொண்டு வந்துசேர்ந்தான் குணா.

பெருங்குளத்தில் ஆமி கலைக்க ஓடி அடுத்த தெருவில் ஏற, ஆமி ஜீப்பில் வந்தான்! பக்கத்துக் காணியால் ஓடி இன்னொரு வீதியால் ஏற ஆமி நடந்து வந்தான்! அருகு வீட்டுக்குள்ளால் பாய்ந்து பின்னொழுங்கையில் ஏற. ஆமி குந்திக் கொண்டிருந்தான்! அடுத்த காணியால் பாய்ந்து விழுந்தடித்து ஓடி, விடயம் தெரியாமல் ''என்ன மச்சா'' னென்று சிரித்துக்கொண்டு வந்த கந்தண்ணையையும் இழுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான் குணா.

''நான் சாகலாம்; நீ சாகலாம். ஆனால், நாங்கள் சாகக் கூடாது.''

வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட அந்தக் சத்திமுனை நாட்களில், குணா இதை அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பான். அவ்வளவு தெளிவு; அவ்வளவு உறுதி.

'' நாங்கள் இங்கயே நிப்பம்; எவ்வளவு நெருக்கடி வந்தாலும் அசையாமல் போராடுவம்; இடைவெளி விடாமல் நாங்கள் போராடிக் கொண்டேயிருப்பம். நாங்கள் சாகச்சாக, எங்கட இடத்திற்கு தலைவர் அடுத்தவர்களை அனுப்பிக்கொண்டிருப்பார். அதனால, நான் சாகலாம், நீ சாகலாம்; ஆனால், ஒருபோதும் நாங்கள் சாகமாட்டோம் .''

தூரத்தில் - சுற்றிவளைப்புக்கு நடுவில் - சயனைட் குப்பியும் கையுமாக நின்று 'வோக்கி'யில் தகவல் சொல்லும் தோழனுக்கும் குணா இதைத்தான் சொன்னான். சொன்னதைப்போலவே தான் வாழ்ந்தான்; போராடினான் ஒவ்வொரு புலிவீரனுக்கும் தியாகத்தை ஊட்டி, குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

இழப்புக்களால் உடைந்துபோகும் மானிடப் பொது விதிக்கு மாறாக, இழப்புக்களிலிருந்து உரம்பெறும் பிரபாகரனின் புதுவிதிக்கு, குணாவும் இலக்கணமானான்.

தளம்பியவர்களுக்கு உறுதியூட்டினான்; குழம்பியவர்களுக்கு தெளிவூட்டினான்; தளர்ந்து நின்றவர்களுககு நம்பிக்கையூட்டினான்; ஒவ்வொரு புலிவீரனுக்கும் வீரத்தையூட்டி - குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

''இந்தியர்களுக்கு அடிக்கவேண்டும்; ஓயவிடாமல் அவர்களைத் தாக்கிக்கொண்டேயிருக்க வேண்டும்; எங்கள் தாயகத்தின் நெஞ்சில் குருதி வழியச் செய்தவர்களின் மேனியில் சன்னங்கள் துளையிடவேண்டும். ஒவ்வொருநாளும் எங்கோ ஒரு இடத்தில், ஏதோ ஒருவகையில், அவர்கள் சேதப்பட்டுக்கொண்டேயிருக்கவேண்டும் எங்கள் சொந்த விடயங்களில் தலையிட்டவர்கள் திரும்பி ஓடுமட்டும் அடித்துக்கொண்டேயிருக்க வேண்டும்.'' ஒவ்வொரு புலிவீரனுக்கும் வேட்கையை ஊட்டி - குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

சாவகச்சேரி நகரில் துரோகக் கும்பலின் பயிற்சி முகாமை வேவுபார்க்க அனுப்பிய நடேசுவையும் பாபுவையும், நுணாவிலுக்கு அருகில் அவர்கள் பதுங்கித் தாக்கி வீழ்த்திவிட்ட ஒரு துயர நாள்.

பொறுக்கமுடியவில்லை அந்த வீரனால்! அடிக்கு அடி கொடுக்கும் வெறிகொண்டான் வேங்கை; பழிக்குப் பழியெடுக்கும் சினம்கொண்டு தேடினான். உயிர் துடித்தது! உடல் கொதித்தது! அடிபட்ட புலியாகி குணா அடி கொடுக்க அலைந்தான். செத்துப்போனவர்கள் பற்றி எரியு முன்னர் ஐந்துதுரோகிகளையாவதுகொன்று, ஆயுதங்களையும் எடுக்கவேண்டும். தாக்குதலணியையும் இழுத்துக் கொண்டு, சாவகச்சேரியெங்கும் குணா அவர்களைத் தேடி அலைந்தான். துயரம்! ஆவேசம்! ஆத்திரம்! 'எம் 16' இன் 'பிஸ்ரர் கிறிப்'பில் பற்றியிருந்த கைகள் துறுதுறுத்துக்கொண்டிருந்தன.

'வேல்சினிமா' முகாமிலிருந்த ஈ. பி. ஆர் எல். எவ். காரர்களுக்கு சேதி போனது. ''எங்களுக்கு அடிக்க குணா தேடிக்கொண்டு திரியிறானாமடா......!'' இறுமாந்து வெளிக்கிட்டது ஒரு கூட்டம். தெருவில் போன வந்தோரையெல்லாம் பிடித்தடித்து, ''நாங்கள் நிக்கிறமெண்டு குணாவிட்ட சொல்லுங்கோடா'' என்று அட்டகாசம்செய்தது. சொல்லிச்சொல்லி அடித்து அனுப்பிக்கொணடு கூட்டம் வந்துகொண்டிருந்த போது -

பெருங்குளம் சந்தியில் வைத்து விழுந்தது நெருப்படி! ஓடஓடக் கலைத்துக் கலைத்துக் குடுத்தனர் புலிகள். 2 மைல் தூரம்! 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி'யென்று தலைதெறிக்க ஓடியது வந்த கும்பல். முகாமின் வாசல்வரை துரத்தித் துரத்தி அடித்து ஐந்துபேரைக் கொன்று, ஆயுதங்களை எடுத்து வந்து, நடேசுவுக்கும் பாபுவுக்கும் பக்கத்தில் அடுக்கிவைத்து அஞ்சலிசெய்த பின்னாதான் -வீரர்களை அடக்கம் செய்ய குணா அனுமதி தந்தான்; அமைதியானான்.

நுணாவிலிலிருந்து கனகம்புளியடிக்கு ரோந்து போன ஒரு பெரிய படையணியை வழிமறித்து - திருப்பி அடித்துக் கலைத்த ஒரு நீளச் சண்டை; புத்தூர்ச் சந்தியிலிருந்து வேம்பிராய்க்கு நகர்ந்த இன்னொரு பெரிய படையணியை இடைமறித்துத் துரத்தி அடித்து. பலத்த உயிர் - பெருட்சேதத்தை உண்டாக்கி, முகாம் வாசல்வரை கலைத்த இன்னொரு நீளச் சண்டை; போன வந்தோரையெல்லாம் பிடித்து அடித்துக்கொண்டு மட்டுவிலிலிருந்து நுணாவிலுக்கு ரோந்துபோன ஒரு படையணியை எதிர்த்துத் தாக்கி, ஆயுதங்கள் எடுத்து மீண்ட ஒரு சண்டை; சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம்போன படைவண்டித் தொடர்மீது 9ஆம் கட்டையில்வைத்து அடித்து, 9 பேரைக் கொன்ற தாக்குதல்...... அவன் செய்தவை கொஞ்சமல்ல.

ஆனாலும் குணா பாவம். ஏனென்றால், அவன் செய்து முடித்த சண்டைகளைவிட, செய்ய முனைந்தும் முடியாமல்போன சண்டைகள் தான் நிறைய. அது ஒரு பெரிய பாதிப்பாக, கடைசிவரைக்கும் அவனுக்குள் இருந்துகொண்டு தானிருந்தது.

சண்டைபிடிக்கவேண்டும்; ஆயுதங்கள் எடுக்கவேண்டும்; ஆயுதங்களை எடுப்பதற்காகச் சண்டை பிடிக்கவேண்டும். அது ஒரு ஆறாத வெறி: தீராத தாகம்.

எத்தனையோ இடங்களில் வேவு பார்த்தான்; எத்தனையோ தடவைகள் ஏற்பாடுகள் செய்தான்; எத்தனையோ இடர்பாடுகளுக்குள் தாக்குதலணிகளை நகர்த்தினான்; எத்தனையோ இலக்குகளை நோக்கி வியூகம் அமைத்தான்.

அவனது துரதிர்ஷ்டம். ஏதோ ஒரு 'இடையூறு', 'இடையூறாய்' வந்து 'இடையூறை' ஏற்படுத்திவிட, அவனது கனவுகளெல்லாம் கனவுகளாகவே போய்விட்டன.

கட்டைக்காடு திடீர் அதிரடித் தாக்குதலைத் தவிர, பெரிய சண்டைகளை நடாத்தும் வாய்ப்பு எதுவும் அந்த வீரனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் தனக்குக் கிடைத்த ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பாகத்தான், அவன் பூநகரியைக் கருதினான்.

குணா பூநகரிக்குப் புறப்படும்போது, தனது எண்ணங்களையெல்லாம் ஈடேற்றும் ஆசையைச் சுமந்துகொண்டல்லவா போனான்! மாதக்கணக்கில் பயிற்சி எடுத்து, அல்லும் பகலும் பட்ட கஸ்டங்களின் விளைச்சலைத் தேடி, மகிழ்ச்சியோடல்லவா அவன் புறப்பட்டான். மேனி சிலிர்த்து, உயிரிறுகி நின்று, கைகளைப் பற்றி - '' குணா சாதிக்கப்போறானடா மச்சான்'' என்றல்லவா சொல்லிவிட்டுச் சென்றான். திரும்பி வருவானென நாங்கள் பார்த்திருந்தோமே...... வெற்றிபெற்றென் மைந்தன் ராஜநடைபயின்று வருவானென, தெனமராட்சி மண் காத்திருந்ததே.... !

ஆனால் குணா! ... எங்கள் உயிர் நண்பனே ...... ஒரு ரவைகூடச் சுட முடியாமல் நீ வீழ்ந்து போனாயாமேயய்யா! அந்தச் சேதி வந்தெங்கள் செவிகளில் மோதி முழங்கியபோது, எப்படியய்யா நாங்கள் தாங்குவோம்? ஆயுதங்களோடு மீண்டு வந்து தென்மராட்சிக்குப் பெருமை சேர்ப்பேன் என்றவனே ...... ! ஆளே வராமல் விட்டுவிட்டாயேடா குணா!

போராளியின் குருதிச்சுவடுகள்

தென்மராட்சி சிறப்புத் தளபதி
லெப். கேணல் குணா
சுந்தரம் **விஜயராஜா**
(28-11-1963 – 11-11-1993)

இந்தியப் போர்க் காலத்தில், உனது பொறுப்பிலிருந்த ஆயுதங்கள் ஒவ்வொன்று ஒவ்வொன்றாய்ப் போனபோது நீ பட்டவேதனை, எம் ஆயுதங்களை இந்தியர்கள் கைப்பற்றியபோது நீ துடித்த துடிப்பு, அவற்றை நினைத்து நினைத்து இருப்புக்கொள்ள முடியாமல் நீ பட்ட அவஸ்தை. நாங்கள் சிரித்துக் கதைக்கிறபோது எம்மோடு சேராமல் ஒதுங்கிப் போயிருந்து அதைபபற்றியே யோசித்துக்கொண்டிருக்கின்ற உன் மனநிலை — ... அதையெல்லாம் அவ்வளவு கெதியாக நாங்கள் மறந்துவிடுவோமா குணா?

உனது மனதறிந்த தலைவர் உன்னை மணலாற்றுக்குக் கூப்பிட்டதும், ஆறுதல் வார்த்தைகளால் உன்னை அமைதிப்படுத்தியதும், தளர்ந்து போய்விடாமல் உற்சாகமூட்டியதும், '' பறிகொடுத்ததில் துவண்டு போகாமல் பறித்தெடு குணா'' என்று ஊக்கப்படுத்தியதும், தோள்களில் தட்டி அவர் வழியனுப்பிவைத்துவிட மகிழ்ச்சியோடு நீ திரும்பி வந்ததும், அந்த வேட்கையோடேயே நீ நேற்றுவரை அலைந்ததும்...... எங்களுக்குத் தெரியாதவையாடா குணா?

இப்போது ஆயுதங்களை அள்ளிவந்து குவித்துவிட்டு பார்த்து மகிழ்கிறோமேயய்யா ... எங்களோடுமகிழ நீ ஏனடா வராமல் போனாய்?

குணா! எங்கள் செல்வமே! கண்திறந்து பாரனடா......உந்தன் மீது விழுந்து விழுந்து கதறி அழுகின்றார்கள் நீ நேசித்த மக்கள். அவர்களால் நம்பமுடியவில்லை; அவர்களால் தாங்க முடியவில்லை; ஏதேதோ எல்லாம் சொல்லிக் கதறுகிறார்கள். எங்களது பிள்ளையா

(12 ஆம் பக்கம் பார்க்க)

கசெற்றா லுபுஸ்கா
சாறே
நைச
மொஸ்கோ போகலாம் வாடா ராசா!

'போலந்து நாட்டில்...... நாலைந்து பேர்கள்
புதைக்கப் பட்டார்கள்'
'கசெற்றா லுபுஸ்கா' வெளியிட்ட செய்தியை
நேற்று விடிந்த வேளையில்
காற்று வந்து காதுக்குச் சொன்னது.
முதலில்கேட்ட முற்றத்துத் தென்னை
ஒப்பாரி வைத்தது.
தோட்டத்துத் துலாக்கொடிகள் தேம்பின.
வயல்வெளி வரம்புகள் வருத்தப்பட்டன.
அளவெட்டி வடக்கில்
தோட்டத்தில் நின்ற கத்தரிச்செடி
வெண்டிக் கன்றுக்குச் சொன்னது:
''அருமந்த பெட்டை, அநியாயச் சாவு.''
சுபத்திரா!
சத்தியரதி!
முகம் தெரியாத எங்கள் தங்கைகளே!
பேருரைக்கும்போதே நாவுலர்ந்து போகிறது.
தொண்டைக் குழிக்குள்ளே
சூரைமுள்ளுக் குத்தியவலி.
ஆஸ்த்மாகாரனுக்கு நெஞ்சடைக்கும்போது
ஏற்படும் அவஸ்தை!
வார்த்தைகள்கூட வரிசைக்கு வராமல்
தூரத்தேநின்று சோகம் கொண்டாடுகின்றன.
போலந்து நாட்டின் எல்லையில்......

உலைக்களம்

வியாசன்

94 ஓகஸ்ட் 27 நள்ளிரவில்
ஐஸ்போல் உறைந்திருந்த 'நைச' நதியில்
ஜேர்மனியக் கனவுகளுடன் இறங்கிய பூரணிகளே!
'சாறே' அரச மயானத்தில்
யாரோ அநாதைகளைப் புதைப்பது போலல்லவா
உங்களுக்கு மண்போட்டு மூடியிருப்பார்கள்?
நாங்களெல்லாம் இங்கிருக்கும்போது
நீங்களேன்
அந்நியதேசத்தில் அநாதைகளாயினீர்?
ஈழம் எரிகின்றதென்றுதானே
தூரப்பறக்கத் துணிவுகொண்டீர்கள்?
இங்கு நாலடி வைப்பதற்குள்
காலடியில் இடறும் சடலங்கள் ஏராளம்;
சாவு மட்டுமே தாராளம்.
மரணத்துக்கு கதவுகளைத் திறந்துவிட்டு
மற்ற அனைத்துக்கும்
எதிரி மதில்கட்டி மறித்துள்ளான்.
ஆனாலும் தமிழீழம்......
அழும் ஈழம் அல்ல.
நாங்கள் கண்ணீரைக் கைவிட்டுக் கனகாலம்.
நீர்வழிந்த கண்களிலே......நெருப்பு மூட்டி
தார் உருக்க தணலெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.
என்றாலும்
உங்களுக்காக எங்களூர்கள் உருகுகின்றன.
விழுதுகளுக்காக வேர்கள் விம்முகின்றன
சுபத்திரா!
சத்தியரதி!
இங்கிருந்த உங்களை இழுத்துச்சென்றவன் யார்?
அப்பனா? அண்ணனா?
அடுத்தவீட்டுப் பெரியப்பா பிள்ளையா?
கடிதமெழுதி வாவென்றழைத்தவன் கணவனா?
காதலனா?
யாரென்று சொல்லுங்களேன்.
சொல்லவே மாட்டீர்களா?
கொழும்புக்கு உங்களை அள்ளிச்சென்று
கட்டுநாயக்காவில் கையசைத்து
விமானமேற்றி விட்டவன் யார்?
முகவர்கள் எப்போது இயமர்கள் ஆனார்கள்?
'மொஸ்கோ சுரேஷ்'
'போலந்து ராசா'
இவர்களை நம்பியா ஆற்றில் இறங்கினீர்?
இடுப்பளவு நீரென்று 'பாகிஸ்தானி' சொன்னானாம்
கொடுக்குக் கட்டிக்கொண்டு குதித்தீர்களாம்.
சோகத்தில்கூட எங்களுக்குக் கோபம் வருகிறது.
இங்கே உங்கள் தங்கைகளைப் பாருங்கள்.
அங்கயற்கண்ணி!
நளாயினி!
மங்கை!
கப்பலை எரித்து அற்புதம் படைக்கின்றனர்.
நீங்கள் போய்
போலந்து நாட்டில் பிணமாகிப் போகின்றீர்.
'சகீக்கி' வடிகாலில்
உங்கள் சடலங்கள் ஒதுங்கியபோது
மொஸ்கோ சுரேசும் போலந்து ராசாவும்
வாவென்றழைத்தவனும் வரவில்லையே;
அநாதைப் பிணம் போலல்லவா
அடக்கம் செய்யப்பட்டீர்.
பால் சூடித்த முலைக்காம்பை உதறிவிட்டு
பாவாடை கட்டித்திரிந்த தாவாரத்தை மறந்துவிட்டு
பறந்து போனீர்கள்.
பங்களாதேசியும், பாகிஸ்தானியும்
''எங்கடை கழிசறைகள் சுரேசும், ராசாவும்''
சொன்ன இடத்தில் சேர்ப்பார்கள் என்றா
நாட்டை விட்டு நடந்தீர்?
தாய்லாந்திலும், மொஸ்கோவிலும்
இன்னும் இன்னும் ஏதேதோ நாட்டிலும்
எத்தனை வதைபட்டு இருந்தீரோ
யாரறிவார்?
கண்மணிகளே!
எங்கள் தாயகம் உங்களுக்கு
என்ன துரோகம் செய்தது?
இங்கிருந்து போங்களென்று உங்களைக் கலைத்தது எது?
ஏன் போனீர்கள்?
கட்டடங்கள் இடிந்துளதுதான்.
என்றாலும்......
இங்கே பட்டினியுடன் யாரும் படுத்ததில்லையே!
எட்டிக் கால்வைக்கும் எதிரியைத் துரத்த
சுற்றிவர உங்கள் சுற்றம் இருக்கிறதே!
ஐரோப்பிய நாட்டில் அப்படி என்ன ஆனந்தம்?
அடுத்தவன் காலடியில் அகப்பட்டுக் கிடப்பதில்
அத்தனை இன்பமென்று சொன்னவன் யார்?
சரி போனீர்கள்,
போயிருந்தாலாவது பேசாமல் இருக்கலாம்.
பிணமாக அல்லவா போய்விட்டீர்.
''எல்லையை மீறி எவரும் வரவேண்டாம்''
நாய்க்கு அறிவிப்பு போட்டது போலல்லவா
வாசலில் எழுதிவைத்துள்ளான்.
அதன் பிறகும் நதியைத் தாண்ட முயன்றீர்கள்.
'நைச' உங்களுக்கு நாசம் செய்துவிட்டது.
தாயின் மடிச் சுகத்தில் தாலாட்டுக் கேட்டபடி
வாய்விட்டுச் சிரித்திங்கு வாழ்ந்திருந்த குருவிகளே!
பெற்றவயிறு புலம்பித்தவிக்கிறது.
மற்றவர்க்கு உறவின் மகிமை தெரியாது.
எல்லோருக்கும் சேர்த்து ஒரு வார்த்தை:
'இங்கே புலரத்தொடங்கும் பொழுது ஆரம்பம்;
அங்கே இருளத் தொடங்கும் வேளை ஆரம்பம்.'
வாருங்கள்.
நீங்கள் வராது விட்டாலும் பரவாயில்லை,
இங்கிருந்து வாருங்களென்று எவருக்கும் எழுதாதீர்.
கோடி புண்ணியம் உங்களைத் தேடிவரட்டும்.

குறிப்புக்கள்

★ கசெற்றா லுபுஸ்கா (Cassetta Lubuska) - போலந்து நாட்டுத் தினசரி.
★ சாறே (Zary) - போலந்து நாட்டு அரச சவச்சாலை.
★ நைச (Neisse) : போலந்து - ஜேர்மனி எல்லையிலுள்ள நதி.
★ சகீக்கி (Zasicki) - பிணங்களொதுங்கிய வடிகாலுள்ள இடம்.
★ மொஸ்கோ சுரேஷ்
★ போலந்து ராசா
} இலங்கையரை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பும் யாழ்ப்பாணத்துத் தமிழ் முகவர்கள்.

www.eelamview.com

பூநகரித் தோல்வியை ஆராய்ந்த ஆணைக்குழுவின் அறிக்கை

ஓர் கண்ணோட்டம்

'ஒப்பறேசன் தவளை' இராணுவ நடவடிக்கைமூலம் பூநகரிக் கூட்டுப் படைத்தளத்தைத் தாக்கி, கடற்படையினரும் தரைப்படையினருமாக சுமார் 1000 படையினரைப் புலிகள் கொன்றனர் என்பது உலகம் அறிந்த செய்தி. சிங்களப் படை சந்தித்த இந்தப் பெருந் தோல்விக்கு எவை காரணம்? அதற்கு யார் யார் பொறுப்பாளிகள் என்பதை ஆராய்ந்து அறிவதே ஆணைக்குழுவின் பணி.

உயர் தளபதிகளைக்கொண்ட இந்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை, அப்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவிடம் அக்குழு கையளித்திருந்தது; பின்னர் சிசில் வைத்தியரத்னா அதை. அப்போதைய சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்காவிடம் சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையின் பிரகாரம் பூநகரித் தோல்விக்குக் காரணமாக இருந்த படை அதிகாரிகள் மீது இதுவரை ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற காரணத்தால், அந்த விசாரணை அறிக்கையை, ஜெனரல் சிசில் வைத்தியரத்னா - இப்போது - பத்திரிகைக்குக் கொடுத்துப் பகிரங்கப்படுத்தியுள்ளார் (' ஐலன்ட் ', 28 - நொவெம்பர் 1994).

அந்த விசாரணை அறிக்கையில் தோல்விக்கான காரணிகள் பட்டியலிடப்பட்டிருப்பதுடன், 22 அதிகாரிகள்மேல் அதற்கான குற்றமும் சுமத்தப்பட்டுள்ளது அந்த அதிகாரிகளின் வகைகள் முறையே....

மேஜர் ஜெனரல் ஒருவர், பிரிகேடியர்கள் நான்கு பேர், கேணல் ஒருவர், லெப். கேணல் ஒருவர். கப்டன்கள் பதின்மூன்றுபேர், லெப்ரினன்ற் ஒருவர், 2 ஆவது லெப்ரினன்ற் ஒருவர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை அசட்டையீனம், சரியான மேற்பார்வையின்மை, தலைமைத்துவப் பலவீனம் என்பவையே ஆகும்.

சிங்களப் படை சந்தித்த பூநகரிப் பேரிழப்புகளுக்குப் பிரதான காரணம், தலைவர் பிரபாகரன் வகுத்த தாக்குதல் திட்டமும் - அதற்கான தந்திரோபாயங்களும், புலிவீரர்களின் போர்த்திறனும் - தியாகசிந்தையும்தான் என்பது உலகம் அறிந்த இரகசியம். உண்மை இப்படியிருக்க, பூநகரித் தோல்விக்குக் காரணிகளைக் கண்டறிய ஒரு ஆணைக்குழுவை அப்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா ஏன் நியமித்தார்? இங்கே தான் சூட்சுமமே இருக்கின்றது.

ஆணைக்குழு நியமிக்கப்பட்டது தோல்விக்கான காரணிகளைக் கண்டறிய அல்ல; அத்தோல்விக்கான பொறுப்பு தன்மீது விழாதிருக்க வேண்டுமென்பதற்காக சிசில் போட்ட ஒரு தடுப்புச் சுவர்தான் அந்த ஆணைக்குழு என்பதை, இக்கட்டுரையை வாசித்து முடித்ததும் நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள்.

ஜெனரல் சிசில் வைத்தியரத்னா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில், அவரது சீருடைமீது தோல்விப் பதக்கங்களே அடுத்தடுத்துச் சூட்டப்பட்டு வந்தன. மண்கிண்டிமலை, கட்டுப்பொத்த, கட்டைக்காடு, டோறா தகர்ப்பு, புலோப்பளை, பூநகரி என்று பல தோல்விப் பட்டயங்கள் அவரை அழகுசெய்தன. இதனால் தனிப்பட்ட ரீதியில் சிசிலின் பெயர் சிங்கள தேசத்தில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. இத்தகைய இராணுவத் தோல்விகளை அந்த அந்தப் படைமுகாம்களின் பொறுப்பதிகாரிகள் மீது சுமத்தி அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டால், தனிப்பட்ட ரீதியில் தான் தப்பிக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பு சிசிலிடம் இருந்தது. மண்கிண்டிமலைத் தோல்விக்கும் ஒரு ஆணைக்குழு அமைத்தார்; ஆனாலும் சிசிலால் தப்பிவிட முடியவில்லை. பூநகரித் தோல்வியின் தாக்கத்தால் அவர் பதவி விலக வேண்டிய நிலை எழுந்தது. ஆயினும் தோல்விகளுக்குத் தலைமைதாங்கிய தளபதி என்ற வரலாற்று அவப்பெயரிலிருந்து தப்புவதற்காக, தான் நியமித்த ஆணைக்குழுவின் வெளியிடப்படாத அறிக்கையை இப்போது தானே வெளியிட்டு, தனது பெயரைப் பாதுகாக்க முனைந்துள்ளார்.

அந்த விசாரணைக் குழுவின் பெரும்பாலான கணிப்புகள் சாதாரணமானவையாகவே உள்ளன.

' அவர் நித்திரைகொண்டதால் இது நடந்துள்ளது. '

' அவர் விடுமுறையில் போனதால்தான் அது நிகழ்ந்துள்ளது.'

' தொலைத்தொடர்பு சாதனத்திற்கு 'பற்றறி' இல்லாததால்தான் தோல்வியே ஏற்பட்டது......' என்றவாறாக, அற்ப காரணங்களே கூறப்பட்டுள்ளன.

அதேவேளை சில காரணங்களை மேலோட்டமாகச் சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு, அக்காரணங்களுக்கு சாதாரணமான களநிலைமையை ஆழமாகப் பார்க்காது பூநகரி முகாம் அதிகாரிகள் மீதே குற்றம் சுமத்தியிருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

படையினரையும் புலிகளையும் இனங்காட்டக்கூடியவகையில் எந்த ஒரு ஆலோசனையையும் வழங்கவில்லை என்றொரு குற்றச்சாட்டு, பூநகரி கூட்டுத்தளப் பொறுப்பதிகாரிமீது சுமத்தப்பட்டுள்ளது. அதாவது, பூநகரி முகாமுக்கு வெளியே நின்ற விமானப்படைக்கும் கடற்படைக்கும் புலிகளின் நிலை தொடர்பாக இவர் சரியான தகவல்களைக் கொடுக்கவில்லை. அத்துடன் முகாமுக்கு உள்ளேயிருந்த ' ஆட்லறி ' அணிகளுக்கும் எங்கே குண்டு வீசுவது என்று அவர் தகவல் கொடுக்கவில்லை என்பதே, அந்தக் குற்றச்சாட்டின் தன்மையாகும்

"ஆத்துக்குள்ள போட்டுட்டு குளத்தில தேடுற மாதிரி – பிரச்சினை இங்க இருக்க உவங்கள் ஏன் தங்களுக்குள்ள புடுங்குப்படுறாங்களோ தெரியேல்ல... எல்லாம் தாங்கள் தாங்கள் தப்பிக்கத்தான்."

ஆனால் உண்மை எதுவெனில், பூநகரிக் கூட்டுத்தளத்தின் பொறுப்பதிகாரியாக அந்த நேரத்தில் புத்தபிரானே இருந்தாலும்கூட, புலிகள் மீது குண்டுவீசுவதற்குரிய சரியான தகவல்களைக் கொடுத்திருக்கமாட்டார்.

ஏனெனில், தாக்குதல் தொடங்கியதும் படையினருக்கு மிக அருகே புலிகள் சென்றுவிட்டனர்; சில இடங்களில் இடம்மாறி - கலந்து நின்றும் போரிட்டனர். இன்ன இடத்தில் இன்ன திசையில்தான் புலிவீரர்கள் நிற்கின்றனர் என்று எவருமே உறுதியாகச் சொல்லமுடியாத அளவுக்கு, படைநிலைகளை ஊடறுத்த புலிவீரர்கள் எதிரியைக் கூறுபோட்டுத் தாக்கினர்.

இதனால். எந்த இடத்தில் குண்டுகளை வீசச் சொல்வது என்று படையினர் தரப்பில் எல்லாருமே குழம்பியிருப்பர். இதற்காக பூநகரிமுகாம் பொறுப்பதிகாரியைக் குற்றஞ்சொல்லிப் பிரயோசனமில்லை. அதற்குப் பதிலாக, இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு - தந்திரோபாயங்களை வகுத்த தலைவர் பிரபாகரன் மீதும் அதை நடைமுறைப்படுத்திய களமுனைத் தளபதிகள் மீதும், அதற்கான "குற்றத்தை" அந்த ஆணைக்குழு சுமத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

இதேவேளை, படையினரின் காவல் நிலைகளுக்கு இடையே இருந்த மிக நீண்ட இடைவெளிகள் புலிகள் உள்ளே ஊடுருவத் துணைசெய்துவிட்டன என்று, இதற்காக யாழ். மாவட்ட சிங்களத் தளபதி மற்றும் பூநகரிப் பொறுப்பதிகாரி ஆகியோர் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

,உண்மையில் இக் குற்றச்சாட்டைப் படைத்துறைத் தலைமை மீதே சுமத்தியிருக்கவேண்டும்: இந்த அகலக் கால்வைக்கும் தத்துவத்தை வடிவமைத்தஅவர்களே இதன் விளைவையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். குறைந்த ஆட்தொகையுடன் அதிக இடங்களைப் பிடித்துவைக்க வேண்டும் என்ற படைத்துறைத் தலைமையின் பேராசை பெருநட்டத்தில் முடிந்தபோது, அதற்கான விலை கீழ்நிலைத் தளபதிகள்மீதும் மற்றும் அதிகாரிகள் மீதும் சுமத்திவிட்டிருப்பதை, இந்த விசாரணை அறிக்கைமூலம் காணக்கூடியதாகவுள்ளது.

" ஆட்பற்றாக்குறையான இந்த நிலையில் பூநகரியின் தென்பகுதியை 8 கி. மீ தூரத்திற்கு விஸ்தரித்தது ஏன் என்று என்னால் விளங்கிக் கொள்ள முடியாதிருக்கின்றது" என்று ஆணைக்குழு முன் யாழ்ப்பாண இராணுவத் தளபதி பிரிகேடியர் நமுனி கூறியிருந்தார். இதே போல பூநகரித் தளபதிகள் கூறிய பல நடைமுறைப் பிரச்சினைகளை, ஒவ்வொரு சாட்டைச் சொல்லி ஆணைக்குழு புறக்கணித்துவிட்டது. அவற்றைக் க்ருத்தில் எடுத்தால் அது படைத்துறைத் தலைமை மீது குற்றம் சுமத்த ஏதுவாக இருந்துவிடும் என்ற காரணத்தாலேயே, ஆணைக்குழு மறுத்தது என்பது புலனாகின்றது.

உண்மையில் பூநகரித் தோல்விக்கான காரணிகளை பூநகரி முகாமுக்குள் தேடுவதில் எதுவித பிரயோசனமுமில்லை; அதை வெளியிலும் தேடவேண்டும்; அந்தத் தோல்வியை பூநகரிக்குள் விதைத்தவர்களது போர் ஆற்றலைப்பற்றியும் ஆய்வுசெய்யவேண்டும். இராணுவ அணுகுமுறை என்று கூறிக்கொண்டு பேரழிவுகளுக்குக் காரணமாக இருக்கும் படைத்துறை உயர் தளபதிகள், மற்றும் அரசுத் தலைவர்களினதும் பொறுப்புணர்ச்சியற்ற தன்மைபற்றியும் - அவர்களது சுயநல அபிலாசைகள்பற்றியும் - ஆராய வேண்டும்; அப்போதுதான் தோல்விக்கான உண்மைக்காரணிகள் தெரியவரும்.

பூநகரித் தோல்விக்கான காரணங்களை வரிந்துகட்டிக்கொண்டு தேட முயலும் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா, தானே திட்டமிட்டு நடாத்திய 'ஒப்பறேசன் யாழ்தேவி'யின் படுதோல்விக்கான காரணங்களை ஆராய ஏன் ஆணைக்குழுவை நியமிக்கவில்லை? சரி... அப்படிச் செய்யவேண்டாம். பரவாயில்லை. 'யாழ்தேவி' தோல்வியின் காரணங்களை ஆராய்ந்து வெளியிட்ட ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் செய்தியாளரை 'ரயர்' போட்டு எரிக்கப்போவதாக ஏன் மிரட்டினார்? அந்தப் பத்திரிகையாளரின் வீட்டுக்கு ஏன் மலர்வளையம் அனுப்பிவைத்தார்?

பூநகரித் தோல்விக்கும் - மண்கிண்டிமலைத் தோல்விக்கும் ஜெனரல் சிசில் ஏன் ஆணைக்குழுவை அமைத்தார்? ;'ஒப்பறேசன் யாழ்தேவி' தோல்விக்கு அவர் ஏன் ஆணைக்குழுவை அமைக்கவில்லை என்பதற்கான விடை, ஜெனரல் சிசிலின் சுயநலத்தை அம்பலமாக்கப் போதுமானது.

இது ஒருபுறமிருக்க, சிங்களப் படை சந்திக்கும் இராணுவத் தோல்விகளுக்கெல்லாம் ஆணைக்குழுக்கள் வைத்து அதிகாரிகளைத் தண்டிக்கத் தொடங்கினால், சில வருடங்களில் சிங்கள இராணுவத்தில் இடைநிலைத் தளபதிகளும் - அதிகாரிகளும் இல்லாது போகும் ஒரு நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பூநகரித் தோல்விக்காக மட்டும் 22 அதிகாரிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று ஆணைக்குழு கூறியுள்ளதானது. மேற்குறித்த கருத்து வெறும் நகைச்சுவை அல்ல என்பதையே காட்டுகின்றது.

பூநகரித் தோல்விபற்றி விசாரித்த ஆணைக்குழு, தோல்விக்கான காரணிகளாக அதிகாரிகளின் அசட்டையீனமும் தலைமைத்துவப் பலவீனமும்சரியான வழிகாட்டலின்மையும் அமைந்துள்ளன எனக் கூறியுள்ளது.

இது உண்மையான - நேர்மையான - அறிக்கை அல்ல !

ஆனால் இந்த ஆணைக்குழு பூநகரித் தோல்வி பற்றிய சரியான அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாதுபோனதற்குக் காரணம் -

1. 'ஒப்பறேசன் தவளை' பற்றிய பூரண அறிவின்மை.
2. இராணுவத் தலைமையைப் பாதுகாக்க முயன்ற தன்மை.
3. புலிகள் இயக்கத்தின் போர் ஆற்றலைக் கருத்தில் எடுக்காமை.

www.eelamview.com

லெப். கேணல் குணா
(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ந்துபோனான் .... ? அவர்கள் கதறுகிறார்களடா...... இலக்குவைத்து இந்தியர்கள் உன்னை வளைத்துவந்தபோது, பொக்கிளிப்பானில் நீ சுருண்டு கிடக்கையில், தங்கள் இறகுகளுக்குள் மறைத்துப் பாதுகாத்த அதே மக்கள்......உனக்காக ஆமிபார்த்த கண்களைப் பாரடா, உனக்காக வேவுக்கு நடந்த கால்களைப் பாரடா, உனக்காகச் சோறூட்டிய கைகளைப் பாரடா, உனக்காக அடிவாங்கிய உள்ளங்களைப் பாரடா......''எமது மக்களே எமது பலம்'' என்றவனே! எங்கள் உயிரினிய நண்பனே குணா.. ...! எங்களுக்குள் ஒருவனாய்; தளபதியாய்; சகதோழனாய் எங்களோடு நீ வாழ்ந்த நினைவுகளில் மூழ்கி உள்ளம் நொருங்கிப்போனதய்யா.. .. ! இந்தியர் காலத்தில் - உனது செல்வாக்கால், உனது நற்பெயரால், உனது திறமையால் எத்தனை தடவைகள் நாங்கள் தப்பி மீண்டோம். நீதானேயய்யா எங்களைப் பாதுகாத்தாய் ... எங்களை விட்டுப் போய்விட்டாயா குணா?

நினைவிலழியாத அந்த யுத்த நாட்கள்!

தமிழ்ச்செல்வனுக்குப் பக்கத்துணையாக நின்று குணா, இந்தியாவுக்கு எதிரான போரை நடாத்திக்கொண்டேயிருந்தான்; இந்தியர்கள், குணாவைக் குறிவைத்து படையை நகர்த்திக்கொண்டேயிருந்தார்கள்.

அவன் அவர்களுக்குப் பெரிய தலையிடி; இந்தியப் படையாட்களின் தூக்கத்தைக் கலைக்கும் பயங்கரக் கனவுகளில் பேயுருவில் அவன் வருவான். நிம்மதி கெட்டது; அவன் அவர்களுக்குப் பெரியதொரு பிரச்சினையாகினான்; அவர்களால் சமாளிக்கவே முடியவில்லை.

நவீன சந்தை மாடியிலேறி காவலரணுக்குக் குண்டடித்து விட்டு, இறங்கி ஓடிய சிறுவனைத் துரத்திப்பிடித்து அடித்து நொருக்க - ''எறியச் சொல்லி குணா அண்ணை தந்தவர்.'

நள்ளிரவில் மறைந்து, ஊர்ந்து, முகாமிற்கு முன்னால் சுவரில் போஸ்டர் ஒட்டுபவனைக் கண்டு, பதுங்கிச் சென்று பாய்ந்து பிடித்து அடித்து விசாரிக்க - ''ஒட்டச்சொல்லிக் குணா அண்ணை தந்தவர்.''

காவலரணுக்கு முன் வீதியால் கனதரம் போய்வந்தவரை சாதுவாகச் சந்தேகப்பட்டு, பிடித்துக்கொண்டுபோய் அடித்து முறித்தபோது - ''பார்த்து வரச்சொல்லி குணா அனுப்பிவிட்டது.''

தாக்கிவிட்டுப் புலிகள் தப்பிப்போய்விட்ட அடுத்த நிமிடத்தில் ஊரையே வளைத்து எல்லோரையும் பிடித்து செம்மையாகச் சாத்துகிறபோது - ''குணாதான் முன்னுக்கு நிண்டு சுட்டது.''

குணா நிற்பதாய் சேதி கிடைத்து, ஆயிரமெனப் படையை நகர்த்தி, சந்துபொந்தெல்லாம் சல்லடைபோட்டு. ஊரையே திரட்டிப் பள்ளியில் குவித்து, அவன் இல்லை எங்கும் என்று நிம்மதியாய் மூச்சுவிட்டுத் தகவல் சாதனத்தை முடுக்க, புலிகளின் அலைவரிசையில்- ''பரணி பரணி - குணா ... இப்பதான் புட்டும் கோழிக்கறியும் முடிச்சிட்டு இருக்கிறம்; நல்ல பிடி.''

மக்களுக்குள் அவன்; கடலில் வாழும் மீன்,

இந்தியர்கள் எதைச் செய்தும், குணாவை எதுவும் செய்யமுடியவில்லை.

அந்தப் பற்றைக்காடுகள், குச்சொழுங்கைகள், குடிசனங்கள், எங்கள் ஆட்காட்டி குருவிகளும், அன்புகதினிய நாய்களும்கூட......கண்ணுக்கு இமையாகி அவனைக் காத்தன.

கூரைக்குள் தூங்கவிட்டுக் காவலிருப்பார் கிழவர். 3 மணிக்கே எழுந்து புட்டுக்கு மா குழைப்பாள் ஆச்சி பருப்பு ஊறவிட்டு வெங்காயம் மிளகாய் வெட்டத் துவங்குவாள் அக்கா. தேநீருக்குத் தண்ணீர்வைப்பாள் தங்கை. 4 மணிக்கு, பெரியவர் மனமில்லாமல் தட்டியெழுப்ப - முகம் கழுவி, தேநீர் பருகி, சாப்பிட்டு, இருளோடு இருளாக இருளுக்குள்ளேயே அலுவல் முடித்து, மூத்தவன் முன்னால் பார்க்க, இளையவன் பின்னால் பார்க்க - பக்கத்து வேலியால் 'பிள்ளைகளை' அனுப்பிவைக்கும்போது, அடுத்த சந்தியில் நாய்கள் அகோரமாய்க் குரைக்கத் துவங்கும். அந்த இந்திய மணம் மெல்லமெல்லக் காற்றைக் களங்கப்படுத்தும். ஊர் உறையும். நெஞ்சு விறைக்க கதவுகளைப் பூட்டிக்கொண்டு வீட்டார் முடங்குவார்கள். வீதிப் படலையை இந்தியச் சப்பாத்து உதைத்து திறக்கும் சத்தம் கேட்கும்......!

குணாவுக்குச் சோறு ஊட்டியவர்கள், குணாவுக்கு மருந்து கொடுத்தவர்கள், குணாவுக்குப் படுக்கை போட்டவர்கள், குணாவுக்குப் பாதை பார்த்தவர்கள், குணாவுக்குக் காவல் இருந்தவர்கள் ..... தேடித் தேடிப் பிடித்துச் சென்று, இந்தியன் அடித்து நொருக்கிக் கந்தல் துணியாக்கி, ''அடுத்த தடவை சூடுதான்'' என்று வீட்டுவாசலில் போட்டுவிட்டுப் போகவும் -

அன்றிரவு ஆடடித்துக் கறியாக்கி, அவனுக்குக் காவிக்கொண்டு போனார்கள் அவனுடைய மக்கள்.

கல்வயலில் கலைத்துக்கொண்டு வந்த இந்தியர்களுக்குத் தப்ப இவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். நாலுபக்க வீதிகளாலும் எதிரி வளைத்துக்கொண்டிருந்தான். அந்த வீடுதான் வசதிப்பட்டது. வழமையாகப் படுக்கவைக்கப்பட்டிருக்கும் பாட்டி முற்றத்தில் - கட்டிலில் - கிடந்தாள். உடலியக்கம் நின்றுபோன ஆச்சி வானத்தைப் பார்த்தபடியேதான் எப்போதும் கிடப்பாள்; அசைவற்றவள். கிழவி கண்டுவிட்டால் சிக்கல் என்று, வேலிக்கரையோடு மெல்ல ஊர்ந்து, யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் புகுந்து, அங்கொரு மூலைக்குள் பதுங்கிவிட- மொய்த்துக்கொண்டு நுழைந்தார்கள் இந்தியர்கள். கிழவியை அவர்கள் மிரட்டுவதும், ஏதோ பதில்கள் அவள் சொல்லுவதும், திரும்பவும் அவர்கள் உறுக்குவதும், பிறகும் அவளேதோ கூறுவதும் கேட்டது. 'நல்லகாலம்......கிழவி காணேல்ல. அது கண்டிருந்துதெண்டால் இணைடைக்கு நாசமறுப்புத்தான்' மணித்தியாலங்கள் போயின. இந்தியன் போனதாய்த் தெரியவில்லை. வெளியில் எட்டிப் பார்ப்பதும் சிக்கல். இவர்கள் யோசித்துக்கொண்டிருக்க, முற்றத்தில் படுத்திருந்தபடியே கிழவிதான் சொன்னாள் - ''தம்பியவை வெளியில வாருங்கோடா, ஆமி போயிட்டான்போல கிடக்கு.''

"நான் சாகலாம்; நீ சாகலாம்;

ஆனால் -

நாங்கள் சாகக்கூடாது"

இரவுபோய்ப் படுத்த மீசாலை வீட்டில் விடிந்துவிட்டது. அறைக்குள் நான்குபேர். கிணற்றடியில் இரண்டுபேர். காட்டிக்கொடுத்தவன், வீட்டுக்குள்ளேயே இந்தியர்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். எட்டித்தொடும் தூரத்தில் எதிரிகள்; துவக்கெடுத்துச் சுடமுடியாத அண்மை; மயிர்க்கூச்செறியும் கணப்பொழுதுகள். குப்பிகள் வாய்களிற்குள் செருக, ''அடித்து விழுத்திக்கொண்டு பாயுங்கோடா!'' - கத்தினான் குணா. திகைத்த இந்தியர்கள் மலைத்து நிற்க, நடுவீட்டுக்குள்ளேயே கைச்சண்டை. மோட்டரைத் தூக்கி கூர்க்காவுக்கு அடித்த அம்மா என்ற வீரனுக்கு கை கழன்று போக, இந்தியன் எஸ். எல். ஆரினால் அடித்து இன்னொருவனுக்கு மண்டை உடைந்துபோக, கட்டிக் குளித்த சாறம் முள்ளுக் கம்பியில் கிழிந்து அடுத்தவன் 'ஒன்றுமே இல்லாமல்' ஓட, ஒரு வழியாக எல்லாரையும் சேர்த்துக் கொண்டு வந்து சேர்ந்தான் குணா. வீட்டாரைப் பிடித்து அள்ளி முகாமிற்குக் கொண்டுபோய்விட்டார்கள் இந்தியர்கள்.

''எமது மக்களே எமது பலம்'' என்றான் அவன்; ''எமது குணாதான் எமக்குக் காவல்'' என்கின்றார்கள் அவர்கள்.

விடுதலைப் புலிகளின் ராஜதந்திரக் காய் நகர்த்தல் இந்தியப் படையை இங்கிருந்து நகர்த்த - வெடி முழக்கங்களோடு தொடங்கியது, சிறீலங்காவுக்கு எதிரான இரண்டாவது போர்.

தென்மராட்சிக் கோட்ட சிறப்புத் தளபதியாக இப்போது அவன்.

இந்தியர் காலத்தில் - நாவற்குழியிலிருந்து இயக்கச்சி வரை ஒவ்வொரு குறுந்தெருவினூடும் மக்களிடம் அவன் நடந்தான்; பின்பு எங்களின் காலத்தில் - அதே சந்துபொந்துகளெங்கும், அதே மக்களைத் தேடி அவனது 'பஜரோ' சில்லுகள் உருண்டன.

அன்றுவரை அவனைப் பாதுகாத்த மக்களை, அன்றிலிருந்து அவன் பாதுகாத்தான்.

போர்முனைகளில் இராணுவ வியூகங்களை நெறிப்படுத்திய அந்தத் தளபதி, ஊர்மனைகளில் அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்குபடுத்தினான்.

வறிய சனங்களுக்கு வேலைவாய்ப்புக்கள், இடம்பெயர்ந்தவர்களுக்குக் குடியிருப்புகள், வேலையிழந்தவர்களுக்கு தொழிற்சாலைகள் - பண்ணைகள், பாலர்பாடசாலைகள், சமூக மேம்பாட்டு வேலைப்பாடுகள்; பாரபட்சம் பாராமல்- ஏற்றத்தாழ்வு காட்டாமல் - அந்தச் சமூகத்தினை உயர்த்த அவன் எல்லாவகையிலும் உழைத்தான்.

அனைத்து இடங்களிலும் அவனுக்குத் துணைநின்ற மக்களுக்காக, அனைத்து வகையிலும் அவன் பாடுபட்டான்.

1991 ஆம் ஆண்டு, சர்வதேசப் பிரசித்தி பெற்ற இரு பெரும் போர்கள் உலகத்தைக் கவர்ந்தன. ஒன்று, 27 நாடுகளைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டு அமெரிக்கா, தனித்து நின்ற ஈராக்கிற்கு அடித்த 'பாலைவனப் புயல்'; அடுத்தது, முப்படைகளும் சேர்ந்து திரண்டு வந்து தாக்கியபோது, புலிகள் தனித்து நின்று எதிர்த்து மோதிய ஆனையிறவுச் சமர்.

தமிழீழம் எந்தக்காலத்திலும் சொல்லிப் பெருமைப்பட முடியும்.

ஆரவாரமான ஏற்பாடுகள். தூக்கமற்றுப் போனான் குணா.

போராளிகளுக்கு சிறிது ஆறுதல் கிடைத்தபோதும் - தளபதிகளுக்கு ஓய்வே இல்லை.

அந்தப் பெருந் தளத்தை முற்றுகையிட்டு - இறுக்கி - அதன் முகாங்களைப் படிப்படியாகத் தாக்கி அழிக்கும் மூலத் திட்டம்.

ஆரம்பித்த நான்காம் நாளே வெற்றிலைக் கேணித் தரையிறக்கத்துடன் சமர் இருவேறு பரிமாணங்களைப் பெற்றது.

ஆனையிறவில் தாக்குதற் போர்முறை; வெற்றிலைக்கேணியில் தற்காப்புப் போர்முறை.

இருமுனைகளில் சமர்; நிறுத்தமற்ற தொடர் சண்டைகள்.

சமராடிக் காயப்பட்டுப்போனவர்கள், காயம் மாற்றித் திரும்பவும் களத்திற்கு வர வேண்டியிருந்த போர் அரங்கு.

1991. யூலை 27ஆம் நாள்.

தடைமுகாம் பகுதி மீதான இரண்டாவது தாக்குதல் தொடுக்கப்பட்ட ஒரு நள்ளிரவு. குணாவின் கட்டளையின் கீழ் அந்த முயற்சி எடுக்கப்பட்டபோது, சூழ்ந்து நகர்ந்த தாக்குதல் அணிகளுக்குத் துணையாய் பிரதான வீதியால் முன்னேறிய எங்கள் கவசவாகனத்தின் தொடர்பு அறுந்துவிட, அதிலிருந்த சதாவிடமிருந்து பதிலில்லை; அருகிலிருந்த சொனியிடமிருந்து தொடர்பில்லை; கூடப்போன குகதாசும் கதைக்கவில்லை ...என்ன நடந்தது .. ? குணா குழம்பிப்போனான். தன்னிலை மறந்த அந்தத் தளபதி 'ரி56'உம் கையுமாக களத்திற்குள் இறங்கினான். சண்டை வீரர்களோடு தானுமொரு வீரனாக - பொறி கக்கும் துப்பாக்கியுடன் பிரதான வீதி ஓரமாக - அவன் கவச வண்டியை நோக்கி நகர, ஏற்கெனவே தான் தாக்கி முறியடித்துவிட்ட கவச வண்டியை நொருக்கவென எதிரி ஏவிய 'கனன்' பீரங்கிக் குண்டு வெடித்துச் சிதற, சிதறிய குண்டின் ஒரு சிறு துண்டு, குணாவின் மூக்கில் துளைத்து உள்ளே போனது. பக்கத்திலிருந்தவர்கள் பலவந்தமாய் இழுத்தபோதும் வரமறுத்து - மூக்காலும் வாயாலும் இரத்தம் ஓட ஓடச் சண்டையிட்டு சோர்ந்து... துவண்டு...செயலிழந்து வீழ்ந்தவனை, அதன் பின்னர்தான் தோழர்கள் தூக்கி எடுத்து பின்னால் கொண்டுவந்தார்கள்.

மருத்துவமனைக்குப் போக மறுத்துவிட்டு ஆனையிறவிலேயே கிடந்தான்.

அருகினில் குண்டு வீழ்ந்து வெடிக்கும் அதிர்ச்சிக்கெல்லாம், குருதி பெருக்கெடுத்து ஓடிக்கிடந்தபோதும் களத்திலிருந்து செல்ல மறுத்துக் கொண்டிருந்தவனை - பொட்டம்மான் கடுமையாக உத்தரவிட்டு 'அம்புலன்சில்' வற்புறுத்தி ஏற்றி அனுப்பிவைத்தார்.

1992, மார்ச் 5ஆம் நாள்.

கறுக்காய்வெட்டைப் பகுதியில் ஆமி வெளிக்கிட்ட ஒரு உற்சாகமான காலைப்பொழுது; காவலரணிலிருந்த வீரர்கள் எதிர்கொள்கிறார்கள். பெருந்தொகையான படையினர்; போர்க்கலங்களின் அகோரமான தாக்குதல்; களத்தில் நின்ற எம் வீரர்கள் கடும் எதிர்ப்பைச் சந்தித்தனர்.

தனது சிறு குழுவுடன் ஏதோ அலுவலாக எங்கோ போய்க்கொண்டிருந்த குணாவுக்கு 'வோக்கி' சேதியைச் சொல்ல, விரைந்த 'பஜரோ' ஆனையிறவுக்குத் திசைமாறியது.

இப்படி நடக்குமென்று எதிரி எதிர்பார்த்திருக்கவே மாட்டான். முன்னேறியவர்களை முற்றுகையிட்டு ஒரு பாய்ச்சல். குறுகிய நேரத்தில் மூர்க்கத்தனமான அதிரடி. 20 பேர்வரையில் கொல்லப்பட, வீழ்ந்தவர்களையும் ஆயுதங்களையும் போட்டுவிட்டு, அவர்தம் தோழர்கள் தப்பினோம் பிழைத்தோமென மண்கிண்டினார்கள்.

1992, மே 28 ஆம் நாள்.

'பலவேகய - 2'

எதிரி கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவுக்குப் படையெடுத்தான்.

ஒளியின் மேல் ஆணை!

பகைவனே!

உனக்குத்தான் கூறுகிறேன்!

தூரத்தே நின்றுகொள்! வெகு தூரத்தே நின்றுகொள்! இல்லை - விலகிவிடு!

எம் தலைவனை நோக்கிவர எண்ணாதே! அவ்விதம் வந்து உன் அழிவைத் தேடாதே!

தவறான கணிப்புடன் வந்து அழிந்தொழிந்து பலர் போனதை, நீ ஆழமாய் நினைந்துகொள்! நினைந்துகொள்!

பகைவன் - எம் இனத்தை அடக்க எண்ணி வரும் பகைமை - எந்த வடிவில் வந்தாலும், அதன் கதி இதுவே!

ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் எத்தனையெத்தனையோ தேசங்களில் இருந்தெல்லாம் இறக்கப்பட்டன!

ஆனால் சிறிலங்கா தரைப்படையின் ஆண்டறிக்கை கூறிக்கொண்டிருப்பது இதுதான் -

'கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் இழப்புக்கள் கூடிவிட்டன' என்பதுதான்!

அடக்க முயன்ற பகைவனின் கடற்கலன்கள், விரைவுத் துருப்பேற்றிகள், ரோந்துப் படகுகள், கட்டளைக் கலன்கள், பீரங்கி பொருத்திய போர்க் கப்பல்கள்! டோறாக்கள்! சாகரவர்த்தனாக்கள்! அடிபட்டுச் சிதைபட்டு அடிக்கடலுக்குள் சில ஆழ்ந்தும்விட்டன! இல்லையா?

போர் விமானங்கள்! எமை அழிக்க வென இறக்கப்பட்ட போர் விமானங்கள்- புக்காரா, சியா மாசெட்டி, அவ்ரோ,

எம். ஐ. 8, பெல் 412, பெல் 212 என இந்தப் பலவும் பல இடங்களில் அடி வாங்கியதும் உண்மையே! கடைசியாக -

இவ்வருடம் ஓகஸ்ட் 2ஆம் திகதி, கரும்புலித் தாக்குதலின்போது, பலாலி ஓடுபாதையில் 'தப்பினோம் பிழைத்தோம்' எனத் தப்பி விரைந்து ஓடிற்று சியா மாசெட்டி! கூட நின்றவையும் கலங்கி மறைந்தன!

இந்தத் திட நிலையில் எழும் எம் குரல்போல ஒலிக்கிறது ஒரு பெரும் குரல்! அது வள்ளுவத்தில் எழும் போர்க் குரல்!

'என்ஐமுன் நில்லன்மீர் தெவ்வீர்' என அதிர்கிறது அக்குரல்!

'எனது ஐயன் முன், அதாவது தலைவனின் முன்,நிற்காதீர் பகைவர்களே' என்பது இந்தக் குறளடி - 771 கூறி நிற்கும் பொருள்.

இது மட்டுமா?

அரசியலை எடுத்துரைக்கும் அதிகாரம் 39 இல் வரும் முதற் குறளின் முதற் சொல் என்ன என எண்ணுகிறீர்கள்?

'படை' என்பதுதான்!

'படை குடி கூழ் (உணவு) அமைச்சு நட்பு அரண் ஆறும், உடையான் அரசருள் ஏறு —— (சிங்கம்) - குறள் 381.

இதைத் தொடர்ந்து -

அஞ்சாமை -

துணிவுடைமை -

மானம் என்பனவே குறள் வரியில் விஞ்சி வருகின்றன!

எம் நிலத்தை - நாட்டை - நாம் ஆள்வதற்குப் படை தேவை: அஞ்சாமை, துணிவுடைமை தேவை; வீரமும் ஈகமும் தேவை என்பது வள்ளுவ நெறி.

எம் தலைவனின் குரலும் இதுவே! தமிழீழக் கோட்பாடும் இதுவே!

எம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்து எழும் ஒளி கூறும் காட்சியும் இதுவே! இதுவே!

- நாக, பத்மநாதன்

ஆனையிறவும் மூடி, பூநகரியும் மூடிப் போக, கொம்படியே தஞ்சமென்று மக்கள் போய்வந்துகொணடிருக்க - பாதைக்குக் குறுக்கே பகைவன் போட்ட 'படைவேலி'.

குடாநாட்டு முற்றுகைக்காய் அவன் செய்த முதற்கட்ட அசைவு.

நாட்கணக்கான சமர்; தொடர் சண்டை; களத்தின் முன் முனையை வழிநடாத்தியபடி குணா.

குலையக் குலைய குழுக்களை ஒழுங்குபடுத்தி, எதிரி நகர நகர புதிதாய் அரண்கள் அமைத்து, துப்பாக்கிக்குத் துப்பாக்கி நிலையிடம் காட்டி, டார்வினின் ஆர். பி. ஜி. 'டாங்கி'யை நொருக்க பக்கத்தில் வைத்து இலக்குக் காட்டி கடைசிவரைக்கும் - களத்தில் நின்றவன்...... பீரங்கிக் குண்டுக்கு உடல் பிய்ந்து வீழ்ந்தான்.

பதற்றப்படாமல் ...... நிதானமாக ...... 'வோக்கி' யில் ரூபனை அழைத்து...... அருகில் வரச்சொல்லி . ... 'எம் 16' ஐக் கொடுத்தவன் - மருத்துவமனையில்தான் கண் திறந்தான்.

1992 நொவெம்பர் 24 ஆம் நாள்.

பலாலிப் பெருந்தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகம் உடைத்தெறியப்பட்ட புகழ் பூத்த தாக்குதல்.

"குறுகிய நேரத்திற்குள் நடந்து முடிந்த கொடிய யுத்தம்" என சிங்களப் படைத்துறைப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க வர்ணித்த போர் அரங்கு.

முன்னணிச் சண்டைக் குழுக்களுக்குள் குணா சேர்க்கப்படவில்லை.

நீண்ட தாக்குதல் வலையத்தில் மகளிர் படையணிக்கு ஒதுக்கப்பட்ட ஒரு பகுதியில், பின் கள வேலைகளே அவனிடம் கொடுக்கப்பட்டிருந்தன.

தாக்குதல் ஆரம்பித்த சொற்ப நேரத்தில், எதிரியின் அரணகளை வீழ்த்தி உள்ளே நுழைந்த பெண் போராளிகள் முன்னேறிக் கொண்டிருந்த வேளை -

அவர்களைப் பின்பக்கத்தால் வளைத்துக் கொண்டான் பகைவன்.

சுற்றிவர எதிரி; நடுவுக்குள் எம்மவர்கள்- அவர்கள் வசமாகச் சிக்கிக்கொண்டிருந்தார்கள்.

நிலைமை மோசமாகிவிட்டதைக் குணா கண்டான்; சூழ்நிலை பிசகி விட்டதை உணர்ந்தான்; அது - தானே முடிவெடுக்கவேண்டிய தருணம் என்பதை விளங்கினான்.

உடனடியாகத் தனது குழுவைக் தயார்ப்படுத்திச் சண்டைக்குள் இறங்கினான் குணா. ஆவேசப்பாய்ச்சல்; அசாதாரணவேகம்; வளைத்து நின்ற எதிரியைத் தகர்த்தெறிந்து நுழைந்தது புலிகளின் சேனை.

கைப்பற்றிய ஆயுதங்களை, களமாடிய துப்பாக்கிகளை, காயப்பட்டு வீழ்ந்தவர்களை, களப்பலியானவர்களை ...... எல்லாரையுமே, எல்லாவற்றையுமே இழுத்து இழுத்துக் கொண்டு வந்து வெளியில் போட்டது அவன்தான்.

1993 செப்ரெம்பர் 29ஆம் நாள்.

குணாவும், அவனது தென்மராட்சிப் படையணியும் - பூநகரிக்குள் பாய பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தபோது, பகைவன் - கிளாலியைப் பிடிக்க முன்னேறினான். நோக்கம் பெரியது என்பதால் பயிற்சி பிற்போட முடியாததாகவும் - முக்கியமானதாகவும் இருந்தது. 'யாழ் தேவி' யை புலோப்பளையில் தடம் புரட்டிய புகழ்பெற்ற தாக்குதலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட படையணிகளுக்குள், அவனது படை சேர்க்கப் படவில்லை.

"எனது பிரதேசத்தில் எதிரி படையெடுக்கிறான்; நாம் போகமுடியாதுள்ளது." குணாவால் தாங்க முடியவில்லை......இருப்புக் கொள்ளாமல் தவித்தான்...... அந்தரப்பட்டான்; சாப்பாட்டை மறந்தான். தூக்கமில்லாமல் எழுந்து திரிந்ததை நாங்கள் பார்த்தோம். அந்தச் சமரில் களமாட முடியவில்லையே என்று உண்மையிலேயே வேதனைப் பட்டான். எந்த நேரமும் 'வோக்கி' யை எடுத்து, நிலைமையைக் கேட்டுக்கொண்டே இருந்தான். அந்த இரண்டு நாட்களும் அவன் துடித்த துடிப்பு இருக்கிறதே......! அதை வெளியாட்களால் புரிந்துகொள்ள முடியாது.

1993 நொவெம்பர் 10ஆம் நாள்.

'ஒப்பறேசன் தவளை.'

மனித சாதனைகள் பதிவு ஏட்டில் - பொன் எழுத்துக்களால் பொறித்துவைககப்படவேண்டிய ஒரு மகத்தான போர்ச்சாதனை.

அனைத்துலகப் படைத்துறை வரலாற்றில் புலிகள் இயக்கம் படைத்த இன்னொரு இராணுவ விந்தை.

படையியலின் பலத்தை வைத்து அரசியலில் பேரபேச முனைவோருக்கு, புலிகள் விடுத்த பூகம்ப எச்சரிக்கை.

போர்முறையானது இருவகைப்படுகின்றது. ஒன்று, 'மரபுவழி யுத்த முறை'; அடுத்தது, 'கெரில்லா (கரந்தடி) யுத்த முறை'. சர்வ தேசப் புகழ்பெற்ற கெரில்லாப் போர் முறையில், பிரபாகரன் உலகிற்கு அறிமுகப் படுத்திய நுட்பமான ஒரு புதுவடிவப் படை நகர்த்தல் பூநகரி வெற்றியின் தந்திரோபாயம்.

சுற்றுவேலியில் பகைவன் பார்த்துக்கொண்டு காவலிருக்க, புலிகள் நடுவீட்டில் தீ மூட்டிய அதிசயம் நிகழ்ந்தது.

பயிற்சி! இடையறாப் பயிற்சி! தொடர் பயிற்சி! நீண்ட கடும் பயிற்சி! - விடுதலைப் புலிகளின் படைவீரர்கள், ஒரு மாபெரும் வெற்றியை ஈட்டிவரத் தங்களையே வருத்தினார்கள்; உருக்கினார்கள்.

அந்த நாள் வந்தது-

"நீங்கள் ஒவ்வொருவருமே என்னுடைய பிள்ளைகள்! எனது ஒரு பிள்ளையைக்கூட நான் அநாவசியமாக இழக்கத் தயாராக இல்லை! அதனால் -அசுர வேகத்தில் முன்னேறி - நீங்கள் வீழ்த்தப்பட முன்னர் எதிரிகளை வீழ்த்தி - வெற்றிக்கனியைத் தட்டிப் பறியுங்கள்!"

போரிடும் படைகளின் தளகர்த்தராய் நின்று, தேசியத் தலைவர் வழியனுப்பினார்.

குணாவின் கையில் மின்னியது ஒரு வெள்ளிச் சங்கிலி. அது இரவு நகர்வுக்குப் பொருத்தமில்லாதது; எதிரிக்கு இனங்காட்டிவிடக் கூடியது. அருகில் வந்த தளபதி சொர்ணம், "உந்த மணிக்கூட்டைக் கழற்றித்தந்துவிட்டுப் போவன் குணா" என்றபோது -

திடீரென என்னவோபோல ஆகினான்; முகம் வாடியது; உண்மையிலேயே கண்கள் கலங்கின; தளபதி புரியாமல் விழித்தார். குணா சொன்னான், "இதை நான் ஒரு நாளுமே என்ர கையிலயிருந்து கழற்றுறேலயண்ணை - தலைவர் தந்தது...... சொல்லிவிட்டுக் குனிந்து மணிக்கூட்டைப் பார்த்தான்; கழட்டிக் கோல்சருக்குள் வைத்தான்.

ஒளியற்ற இருள்......!நிலவற்ற வானம்......! கார்முகில் பன்னீர் தெளித்து வாழ்த்தியது.

உறங்கிக்கொண்டிருந்த தேசத்தை நாளை உவகையோடு துயிலெழுப்ப, மரணம் விளையாடும் களத்தை நோக்கி நகரத் தொடங்கினர் புலிகள்-

சண்டைக் களம் அபூர்வமானது. நினைத்துப் போவது நடக்காமல் போகும்; நடந்துவிடுவது நினையாததாய் இருக்கும்.

கும்மிருட்டு! தவறவிட்ட பாதையை பின்னர் சரிப்படுத்தி வேவு வீரன் இடத்தைக் காட்டினான் குணா ஆணையிட்டான்! முன்னணித் தாக்குதற் குழுக்கள் அரண்களை உடைத்துக் கொண்டு பாய்ந்தன! ஆவேசமான தாக்குதல்! வீழ்த்தப்பட்ட அரண்களின் ஊடு, பிரதான தாக்குதலணியோடு குணா முன்னேறினான். எதிர்பாராதவிதமாக - தாக்கப்பட்ட அரண்களிலிருந்து பின்வாங்கிய எதிரி, பிரதான அணிக்குப் பக்கவாட்டில் வந்து பின்பக்கத்தால் தாக்கினான். 'மினிமி ஜீ. பி. எம்.ஜி. கள் ரவைகளை அள்ளிப்பொழிந்தன. முன்னால்போன குணா, பின்னால் அடிவிழத் திகைத்து, 'என்ரபொடியள்......!' என்று திரும்பி ஓடிவந்து தாக்க முயல......!எங்கள் குணா ...!

பூநகரி வெற்றியின் முதற் களப்பலியாய் சன்னங்கள் சல்லடையாக்க வீழ்ந்தான் எம் வீரன்!

ஓ! எங்கள் குணா.....! தமிழீழப் போர் வானின் நம்பிக்கை நட்சத்திரமாய் மெல்லென ஒளிர்ந்த படைத் தளபதியே ....! ஒவ்வொருவரினதும் உயிரினை ஊடுருவி இதமாக வீசிய குளிர் காற்றே......முற்றுகையில் முன்னின்றாய்- முதற் சாவு நீ கண்டாய் ..... போய்விட்டாய்!

நாங்கள் நடக்கின்றோம்.

அதே குச்சொழுங்கை .....அதே தோட்ட வெளி — அதே தென்னந்தோப்பு ... அதே வழித்தடம்...... சுதந்திரத்தின் சிகரத்தை நோக்கிய எங்கள் நெடும் பயணம்!

- தி. இனியவன்

www.eelamview.com

சந்திரிகா அரசாங்கத்தின் போக்கும் - தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வும்!

புதுவருடத்தின் இரண்டாம் நாள் காலையில், யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரியில் தான் இறக்கிவிட்டுப் போனவர்களை, மாலையில் திரும்பவும் வந்து ஏற்றிக்கொண்டு உலங்கு வானூர்தி பறந்து போகையில் - சண்டைகளைத் தவிர்ப்பதற்கு மட்டும் உடன்பாடு காணப்பட்டிருக்கின்றது.

முதலாவது சுற்றுப் பேச்சிற்கு வந்துவிட்டுப் போனவர்கள், போனதுதான்; கொஞ்சக் காலமாக இந்தப் பக்கம் காணவேயில்லை.

அப்போது பிரதம மந்திரியாக மட்டுமே சந்திரிகா இருந்தபடியால், அவர் ஜனாதிபதித் தேர்தலை வெல்லும் வரை - நிறைவேற்று அதிகாரங்களைத் தன்கையில் அவர் பெறும்வரை - அதிகமாகத் தாங்கள் எதையும் செய்ய முடியாதென்று அவர்கள் சொன்னார்கள்.

அந்தக் காரணமும் நியாயமானதாகத்தான் பட்டது; ஏற்றுக்கொள்ள வேண்டியுமிருந்தது.

ஆனால், சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேறிய பின்னரும் இதே பின்தங்கல்தான் தொடர்ந்தது.

காமினி திசநாயக்கா கொல்லப்பட்டதை ஒரு காரணமாகச் சொல்லத் துவங்கினார்கள்.

அவர் கொல்லப்பட்டதால் சிங்களவர்கள் "குழம்பியுள்ளார்கள்" என ஒரு விளக்கம் தந்தார்கள்.

மனிதக் குண்டானபடியால் இது புலிகளின் வேலைதான்; உலகத்தில் வேறு ஆட்கள் இல்லை என ஊகங்கள் சொல்லப்பட்டன.

"ஊகங்களெல்லாம் உண்மையானவை அல்ல; காகங்கள் சும்மா கத்தித் தொலைக்கின்றன. எவன் வைத்த குண்டோ? எவனுக்குத் தெரியும்? எவன் வைத்த குண்டென்று அந்த எமனுக்கே தெரியும்" என்றார் புதுவை இரத்தினதுரை.

இன்னொருபடி மேலே போய், "தாங்கள் கடந்த காலங்களில் செய்த கர்மவினைகளுக்காக இப்போது அவர்கள் செத்துக்கொண்டிருக்கின்றார்கள்" என்று சொன்னார் அன்ரன் பாலசிங்கம்,

எது எப்படியிருப்பினும் - "இராணுவத் தீர்வுதான் ஒரே வழி" என்று கூறிய பேரினவாதி, 'காமினி'.

"புலிகளை அழிக்கும் வரை யுத்தத்தைப் பிரகடனப்படுத்துவேன்" என மேடைகளில் சூளுரைத்துக்கொண்டு திரிந்தவர் அவர்.

"இந்தியப் படைகளை மீண்டும் அழைப்பேன்" என்பதையும் அவர் வெளிப்படையாகவேதான் சொன்னார்.

ஆனால் சிங்கள மக்களின் கொள்கை இப்படியானதாக இருக்கவில்லை. அதனால், அவர்கள் குழம்புவார்கள் என்பது யதார்த்தத்திற்குப் புறம்பான ஒரு எதிர்பார்ப்பு மட்டுமாகத்தான் இருந்தது.

சிங்கள மக்களும் முன்னொரு காலத்தில் இராணுவ வழிமுறைகளே உகந்தவை எனப் பின்பற்றியவர்கள்தான்.

ஆனால், இப்போது அவர்கள் அமைதிவழியில் பிரச்சினையைக் கையாள நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டனர்.

விடுதலைப் புலிகளின் நீண்ட - மூர்க்கமான - களைப்பற்ற போராட்டம், சிங்கள தேசத்தின் அதிஉயர் மட்டத்திலிருந்து மிகக் கீழ் மட்டம் வரை ஏற்படுத்திய பேரிழப்புகள் அவர்களைச் சமாதானப் பாதைக்கு இட்டு வந்துவிட்டன.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்களவர்கள் அளித்த 68 % சரித்திர வாக்குகள் சந்திரிகாவுக்கு வழங்கப்பட்டவையல்ல; உண்மையில் அவை சமாதானத்துக்காகப் போடப்பட்டவையே ஆகும்.

சந்திரிகாவும் இதனை நன்றாகவே அறிவார்.

எனினும், சமரச முயற்சிகளை வேகமாக முன்னெடுத்துச் செல்லவேண்டிய தனது பிரதான கடமைப்பாட்டிலிருந்து விலகி- தடம்மாறி- சந்திரிகா பேச்சுக்களை இழுத்தடித்தார்; ஆயுதப் படைகளைப் புனருத்தாரணம் செய்தார்.

முன்னைய அரசு படைத்தளபாடக் கொள்வனவுக்காக எழுதி, பின்னர் தான் ரத்துச் செய்த ஒப்பந்தங்களை - மீளவும் அவரே புதுப்பித்தார் படைகளின் உயர்பீடங்களை விரிவாக்கம் செய்து புதிய நிர்வாகக் கட்டமைப்புக்களையும் உருவாக்கினார்.

சமாதானத்தின் பெயரால் ஜனாதிபதியாகியவர், அமைதியை ஏற்படுத்துவதில் ஏன் அசிரத்தையாக இருந்தார் என்பது புரியவில்லை!

இதற்கிடையில், சிங்கப்பூருக்கும் மாலைதீவுக்கும் அவசர அவசரமாகப் பயணம் போய்விட்டும் வந்துள்ளார்.

'தூங்குவதற்காகப் போனார்' என்று சொன்னார்கள்.

எரிந்துகொண்டிருக்கும் ஒரு பிரச்சினை இங்கே பூதாகரமாகத் தேசத்தை விழுங்கிக்கொண்டிருக்க, சனங்களின் அதிபதி நித்திரைகொள்ளப் போனாரா.....? விளங்கவில்லை;

இந்தப் பயணங்களின் பின்னுள்ள மர்மம் தான் என்ன?

அதுபற்றி கடவுளிடம் அல்லது அவருடன் கூடப்போன பத்மா மகாராஜாவிடம்தான் கேட்க வேண்டும். (மகாராஜா என்ற பிரபல தமிழ் முதலாளியின் மனைவி இவர்; சந்திரிகாவின் குடும்ப சிநேகிதி ஆவார்).

ஆனால், விடுதலைப் புலிகளுடனான சமரசப் பேச்சுக்களுக்கும் இந்தப் பயணங்களுக்கும் ஏதாவது தொடர்புகள் இருக்கக்கூடுமோ என, வடக்கிலுள்ள சில அறிவுஜீவிகள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

மூன்று மாதமாக இழுத்தடித்துவிட்டு, மாலைதீவால் வந்தவுடன் விழுந்தடித்து ஓடி வந்து பேசுவதற்குப் பின்னால், அவர்கள் ஏதாவது காரணத்தைத் தேட முயலுகின்றார்கள்.

ஒட்டுமொத்தமாக அவர்கள், இந்தியாவின் 'றோ'வைச் சந்தேகிக்கின்றார்கள்.

இவ்விதமான சந்திரிகா அம்மையாரின் நடவடிக்கைகள், தமிழர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வைத்ததுடன் - காலங்காலமாகப் பேரினவாதத் தொற்று நோய் பீடித்து வருகின்ற சிங்களத் தலைவர்களிலிருந்து, சந்திரிகாவும் விதிவிலக்கானவரல்ல என்ற எண்ணப்பொறியையும் தோற்றுவித்துவிட்டுள்ளன.

இத்தகைய ஒரு நிலையிலேயே - இதோ...! இதோ...! என எதிர்பார்க்கப்பட்டுக்கொண்டிருந்த இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள், யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்தும் விட்டன.

சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்ற தன் பின்னர் - அதாவது நாட்டிற்கான அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் அவர் தனது கைகளில் பெற்றுக்கொண்டதன் பின்னர் - நடைபெறுகிற முதற் சந்திப்பு என்றபடியால், தமிழர்கள் மிகுந்த நம்பிக்கையோடு காத்திருந்தார்கள்.

தங்களை நாளாந்தம் சுட்டெரித்துக்கொண்டிருக்கும் அவசரப் பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு கிடைக்கும் என மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்க-வந்தவர்கள்மோதல்களை நிறுத்துவது பற்றி மாத்திரம் முடிவெடுத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

எனினும் - "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது, தங்களது மன ஆறுதலுக்காக தமிழர்கள் காலாதி காலமாகச் சொல்லிவரும் ஒரு நம்பிக்கை வரி. இப்போது தை பிறந்துள்ளது. அடுத்தடுத்த சுற்றுப் பேச்சுக்களில் அவர்களுக்கு வழி பிறக்குமா...? பார்க்கலாம்.

* * *

காலாண்டு காலத்திற்கு முன்னர் - காட்டாற்று வெள்ளம் போலத் திரண்டெழுந்த ஒரு சந்திரிகா அலை, இலங்கைத் தீவு முழுவதையுமே தன்னுள் அமிழ்த்தியது. தமிழர்களின் முகங்களிலெல்லாம் இனம்புரியாத ஒரு மலர்ச்சி தோன்றியது. பூர்வீகம் பேரினவாத மூதாதையாக இருந்தாலும், பழைய அடிவேரில் முகிழ்ந்த ஒரு புதிய துளிராகத்தான் தமிழர்கள் சந்திரிகாவைப் பார்த்தார்கள். அவரது கல்வி, பட்டறிவு, வாழ்க்கைப் பின்னணி என்பவற்றை வைத்து அவர் புதிய நோக்கில் சிந்திப்பார் எனத் தமிழர்கள் நம்பினார்கள்; இப்போதும் நம்புகின்றார்கள்.

தங்களது தன்னாட்சி உரிமையைச் சேதப்படுத்தாத - தங்களது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தாத- தங்களது கௌரவத்தைப் பாதிக்காத - ஒரு நியாயமான - தர்மமான தீர்வை சந்திரிகா கையளிப்பார் என, தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

அவர்களது நம்பிக்கைகளுக்குத் துரோகம் இழைக்காமல், அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்காமல், அவர்களது அபிலாசைகளை நிறைவுசெய்யவேண்டிய கடப்பாடும் கட்டாயமும், சந்திரிகா பண்டாரநாயகா குமாரணதுங்கவின் தலைமேல் சுமத்தப்பட்டுள்ளன. அவர் அதைச் சரிவரச் செய்வாரா...?

- தி .பரந்தாமன் ○

இரண்டாம் சுற்றுப்பேச்சில் தமிழ்ச்செல்வன், பிரிகேடியர் பீரிஸ்! நேசக்கரங்கள் இறுகட்டும்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com